# கண்ணன்

1-3-58

13 ந.பை



OFFICE OF THE REGISTRAR
17 MAR 1958
MADRAS

# செய்திகள்

## மௌலானா அபுல் கலாம் ஆசாத்

இந்திய யூனியனின் கல்வி மந்திரியாக இருந்த மௌலானா புது டில்லியில் காலமாகிவிட்டார். பழம்பெரும் தேச பக்தரும் அறிஞருமான அவருடைய மறைவு ஈடு செய்ய முடிய மாபெரும் நஷ்டம் என்று பிரதமர் நேரு கண்ணீர் மல்கக் கூறுகிறா. வாழ்க்கை முழுதும் இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்காக உழைத்த பெரியார்களில் ஆசாத்தும் ஒருவர். 1888 - ஆம் ஆண்டு முஸ்லிம்களின் புனித பூமியாகிய மெக்காவில் பிறந்தார் இவர். சிறுவயதிலேயே அரபு, பர்ஸிய மொழிகளிலும் உருது மொழியிலும் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கினார். பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவர் தம் தந்தை மூகம்மது கைருதீன் என்பவரோடு இந்தியா வந்து கல்கத்தாவில் வசிக்கத் தொடங்கினார். அதற்குப் பிறகு சில ஆண்டுகளிலேயே பல ஐரோப்பிய மொழிகளையும் கற்றறிந்தார். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுமைகளைக் கண்டு தேசிய இயக்கத்தில் சேர்ந்து, அல் ஹிலால் (பிறை) என்ற வாரப் பத்திரிகையையும் தொடங்கினார். முதல் மகா யுத்தத்தின்போது பத்திரிகையைத் தடை செய்து அவரையும் பிரிட்டிஷார் சிறைப்படுத்தினார்கள். சிறையில் தஸ்கிரா என்று குரான் வேதத்துக்குச் சிறந்த விளக்க நூல் ஒன்றை இவர் எழுதினார். 1923 - இல் அவர் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக ஆனார். 1930-இலும் 1940-இலும் அவர் மீண்டும் காங்கிரஸ் அக்கிராஸனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1942-இல், 'வெள்ளையரே, வெளியேறு' என்கிற இயக்கத்தில் மீண்டும் நான்காம் முறையாகக் கைது செய்யப்பட்டார். சுதந்தர உதயத்தின்போது இடைக்கால மந்திரி சபையில் கல்வி மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சர்வ கலாசாலைக் கமிஷனில் அறிக்கையை மூன்று வால்யூம்களில் தயாரிக்க அவரே பொறுப்பாக இருந்தவர். இந்திய வேதாந்த என்ற நூலைத் தயாரிக்கச் செய்தவரும் அவரே. ஆசாத் என்பது அவருடைய புனை பெயர். 69-ஆண்டுகள் சிறந்த லட்சியங்களுக்காகப் போராடி, தாய் நாட்டின் விடுதலையைக் கண்டு களித்த அவருடைய உயர்ந்த ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்போம்.

## வானவெளியில் ஏழு நாட்கள்

சந்திரலோகத்துக்குப் பிரயாணம் செய்வது எப்படி இருக்கும் என்பதைக் கண்டறிய எண்ணினார் ஓர் அமெரிக்க வாலிபர். அமெரிக்க ராணுவம் வெளி மண்டலத்தில் சுற்றக் கூடிய பெட்டி ஒன்றைத் தயாரித்தது. ஏழு நாட்களுக்கு வேண்டிய உணவு முதலிய வசதிகள் அதிலே வைக்கப்பட் டிருந்தன. ராக்கெட் சாதனம் மூலம் அது வெளி மண்டலத்துக்குப் பறக்க விடப்பட்டது. ஏழு நாட்கள் பூமியை விட்டு, உலகத்தைச் சுற்றிக்கொண் டிருந்த அவர் மீண்டும் பூமிக்கே பத்திரமாக வந்துவிட்டார். அவருடைய அநுபவங்கள் சந்திர மண்டலப் பிரயாணத்துக்கு மிகவும் உபயோகமானவையாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

## எகிப்தும் சிரியாவும்

இதுவரையில் தனித்தனி சுதந்தர நாடுகளாக இருந்தன எகிப்தும் சிரியாவும். ஆனால் வலிமை மிக்க கோஷ்டி நாடுகளாக விளங்கும் இந்தக் காலத்தில் சிறிய நாடுகள் தனித்திருப்பது சரியல்ல என்பதை உணர்ந்து, அந்த நாடுகள் இரண்டும் இப்போது ஐக்கியமாகி விட்டன. அந்தப் புதிய யூனியனுக்கு ஐக்கிய அரபுக் குடியரசு (U.A.R.) என்று பெயர் சூட்டப்பட் டிருக்கிறது. எகிப்தின் ஜனாதிபதியான கர்னல் கமால் அப்துல் நாஸரே இந்தப் புதிய குடியரசுக்கு ஜனாதிபதியாகத் தேர்தெடுக்கப்பட் டிருக்கிறார்.

மலர் 9 இதழ் 5

1—3—1958

# குழந்தைகளே !

இதோ எதிரே 'எழுத்தாளர் அறிமுகம்' தொடங்குகிறது. வளர்ந்துவரும் புது எழுத்தாளர்கள், நீண்ட நாட்களாகவே குழந்தைகளுக்காக எழுதும் பெரிய எழுத்தாளர்கள் ஆகிய அனைவரையுமே இந்தப் பகுதியின் மூலமாக உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்பது என் ஆசை. கதைகளையும் கவிதைகளையும் படித்து ரசித்த நீங்கள் அவற்றை எழுதியவர்களையும் பார்த்துத் தெரிந்துகொள்ள விரும்புவதை நான் அறிவேன். வளரும் எழுத்தாளர்கள், பழம் பெரும் எழுத்தாளர்கள் என்று பிரிக்காமல் இருசாராரையும் கலந்தே அறிமுகப்படுத்த எண்ணியுள்ளேன். குழந்தை எழுத்தாளர் சங்கம் என்று சென்னையில் பல ஆண்டுகளாகச் சிறந்த முறையில் பணி புரிந்து வருகிறது. அதேபோல் சென்ற ஆண்டு வளரும் எழுத்தாளர்கள் என்று நாடெங்கிலுமுள்ள எழுத்தாளர்கள் ஒரு சங்கம் அமைத்து, அதன் தலைமைக் காரியாலயத்தைத் திருச்சியில் அமைத்திருக்கிறார்கள். ஓராண்டில் அவர்களும் சிறந்த முறையில் பல காரியங்கள் செய்திருக்கிறார்கள். இந்த இரு சங்கத்தாருடைய ஒத்துழைப்பும் இந்தப் பகுதிக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

இந்த இதழில் 'பேய் காத்த பேழை-2' என்ற முழு நீளக் கதை வெளியாகிறது. முன்பு வந்த கதைக்குத் தொடர்ச்சியாக இது அமைந்திருப்பதால் அதே தலைப்பில் இது பிரசுரமாகியிருக்கிறது. ஜி. ஜயராமன் சிறந்த முறையில் செய்த இந்தக் கற்பனையை மகிழ்ச்சியோடு வெளியிடுகிறேன்.

—ஆசிரியர்.



## அழகனார்

கோவை-மாச்சம்பாளையத்தைச் சேர்ந்தவர் அழகனார். 1950-இல் டமாரம் என்ற பத்திரிகையில் இவருடைய முதல் கதை வெளியாகியது. பிறகு பல பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதியிருக்கிறார். இதுவரையில் அச்சான கதைகள், கட்டுரைகள், கவிதைகளின் எண்ணிக்கை மட்டும் கிட்டத்தட்ட நூறு இருக்கும். டமாரம், டிங்டாங், அணில், பாலபாரதி, அம்புலிமாமா, கரும்பு, கண்ணன், கல்கி, கல்கண்டு, மாணவர் குரல், தியாகக் குரல், கோவைக் குரல், சமுதாயம், நவ இந்தியா, பேசும் கலை, வீரகேசரி, வெற்றி மணி, சாக்லெட், நாடோடி, நிலா, லட்டு, செந்தாமரை, மனோரஞ்சிதம், சிறுவர் குரல் ஆகிய பத்திரிகைகளின் நீண்ட பட்டியலில் இப்பொழுது பல பத்திரிகைகள் நின்றுவிட்டன என்று தெரிகிறது. ஆயினும் எழுத்தையே மூச்சாகக்கொண்ட அழகனார் தாம் மட்டும் எழுதுவதையும், எழுதியவற்றை விடாமல் பத்திரிகைகளுக்கு அனுப்புவதையும் நிறுத்தவில்லை. திரும்பிவிடுகிறதோ - பிரசுரமாகிறதோ - எழுதுவது தன் கடமை என்ற லட்சியம் கொண்ட இந்த இளைஞர் பயங்கரத் துப்பறியும் கதைகளை வெறுப்பவர். அன்பெழில் என்ற புனைபெயரும் இவருக்கு உண்டு.



# காக்கா ரிப்போர்ட்டர்!

காகா வென்று கத்திக்கொண்டு காக்கையார் வந்தால்
கடுகடுத்துப் பார்த்திடாமல் கையைத் தூக்காமல்

காகா பேச்சைக் கௌரவித்துக் காது கொடுத்தால்
கணக்கில்லாத சேதிசொல்வார் காக்கா ரிப்போர்ட்டர்!

சீக்கா யிருக்கும் தாத்தாஉடம்பு சீர் அடைந்தாரா?
சித்தப்பாவும் லீவுமுடிந்து சிம்லா போனாரா?

ஷோக்காய்த் திரிந்த சோனிமாமா சோல்ஜர் ஆனானா?
சொன்னாப்போலே சொக்கிப்பாட்டி சொர்க்கம் போனாளா?

மக்கா யிருந்தும் அக்காமகள் மாலா பாஸ்தானா?
மமதைகொண்ட மதுரம் அத்தைக்கு மகனும் பிறந்தானா?

பக்கா கஞ்ஜூஸ் பட்டண்ணாதான் பரிசைப் பெற்றாரா?
பம்பாய் அத்தான் பரேலில் இடமும் பார்த்து விட்டானா?

வாலுவுக்கு ஒரு வழியாய் வரனும் குதிர்ந்ததா?
வடலூர்ப்பிச்சு மறுபடியும் வந்து குந்துதா?

நீலு பையன் நிர்மலுக்கு நிற்க வந்ததா?
நீணா குண்டு டான்சும் பாட்டும் நிறுத்திக் கொண்டதா?

ஏதும் தெரிய வேண்டுமென்றால் ஏங்கி நிற்காதே!
எல்லாம் தெரிந்த காக்கைவந்து எதிரில் கூறுவார்!

காது கொடுத்துக் கேள்; சிறிது காணிக்கையும் வை;
கருத்தில்உள்ளதைக் கண்டுசொல்வார் காக்கா ரிப்போர்ட்டர்!

—லெமன்


கடற்புலியும் கிழவனும் பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஆணுடையில் இருந்த ராஜகுமாரி ஓடி வருகிறாள்
அதோ, யாரோ ஓடி வருகிறார்கள்!
ராஜகுமாரி கடற்புலியைப் பிடித்து நிறுத்திப் பேச்சுக் கொடுக்கும் போது மரத்தில் இருந்த உருவம் கீழே குதித்து ஓடுகிறது.
உங்களுக்கு ஆபத்து ஒன்றும் இல்லையே! பயந்தே போனேன்!
கடற்புலி அருகில் கிடந்த வில்லை எடுத்து அம்பைத் தொடுக்க . . . . . . . .
வேண்டாம்! யாராக இருந்தாலும் தப்பிச் செல்லட்டும்!
இதை இப்படியே விட்டால் ஆபத்து. உடனே மரக்கலங்களையும் படைகளையும் கொண்டு மணி பல்லவத் தீவைத் தாக்க வேண்டும்!
மணி பல்லவமா? மணி பல்லவமா உங்கள் தீவு?
என் தீவு தான்! ஹவ்ஹா! அது இனி உன் தீவு கூடத் தான்!


மூவரும் பேசிக் கொண்டிருக்கும் போது......
என்ன, என்ன?
குடிசைகளும் மரங்களும் தீப்பற்றிக் கொண்டு எரிகின்றன!
தீவு எங்கும் ஒரே கூக்குரலும் கலவரமுமாகக் கேட்கிறது. தலைவன் இருந்த இடமும் மற்றக் குடிசைகளும் பச்சை மரங்களோடு எரிந்து கொண்டிருக்கும் காட்சியும் காட்டு மிராண்டி மக்களின் ஓலமும் கேட்கின்றன.
படைகள் மரக்கலங்களில் ஏறுகின்றன.
பாய்மரத்தை விரித்துக் கட்டுங்கள்! மேல் திசை நோக்கிச் செலுத்து....!
மரக்கலங்கள் பொங்கும் கடலில் அணிவகுத்துச் செல்லும் காட்சி தெரிகிறது.
அப்பாடா! என் கனவு நினைவாகிறது!
அது என்ன பெரியவரே, உங்கள் கனவு?

டரும்)



# காளிகோட்டை ரகசியம்

**'ஜன'**

## 6 பகையே - சுற்றி நில்லாதே, போ!

குன்றுகள் சூழ்ந்த பரந்த வெளியானதால் அந்தக் கூச்சல் பேரோலமாக எதிரொலித்தது. வண்டியை இழுத்த மாடு இதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தானாக அந்தக் குடிசை வாயிலில் போய் நின்றது.

அந்த இடத்தில் சாலை மேற்கு நோக்கி வளைந்து, குன்றின் பாறைகளைச் சுற்றிக்கொண்டு சென்றது. அதனால் அப்படிக் கூச்சலிட்டுக்கொண்டு வருவது யார் என்று சிறுவனுக்குத் தெரியவில்லை.

நெடுமாறன் சட்டென வண்டியைவிட்டுக் குதித்தான். மாட்டை அவிழ்த்துவிட்டான். அது அந்த இடத்தில் நன்றாகப் பழக்கப்பட்ட மாடு என்று தோன்றியது. குடிசையின் பின்புறத்தில் உள்ள சிறிய ஏரியை நோக்கிச் சென்றது அது. குளிர்ச்சியும் பசுமையும் நிறைந்த அந்த இடம் பாலையில் உள்ள சிறு பசுஞ்சோலைபோல் விளங்கியது. அங்கே குடிசையைச் சுற்றிக் கருகருவென்று வளர்ந்திருந்த புல்லைக் கண்டதும் அவனுக்கு உடனே தன் புள்ளிமான் வள்ளியின் நினைவுதான் வந்தது.

அந்த நினைவு அடுத்த கணமே மீண்டும் வெகு அருகில் கேட்ட சத்தத்தால் கலைந்தது. சாலையின் வளைவைக் கடந்து, பாறைகளை அலட்சியமாகத் தாண்டியவாறு மற்றோர் இளைஞன் ஒருவன் குடிசையை நோக்கி ஓடோடி வந்துகொண் டிருந்தான்.

தோளிலே அம்பறாத் தூணியும் இடது கையிலே வில்லும் இடையிலே தோலாடையும் அணிந்திருந்த அந்த இளைஞன் கட்டிளமையோடு காணப்பட்டான். அருகில் நெருங்க,

நெருங்க அவனுடைய வசீகரமான தோற்றத்தில் காட்டு ஜாதியினரின் அநாகரிக வாடை கலந்திருப்பது தெரிந்தது.

"என்னடா செங்கணு, புலியா உன்னைத் துரத்தி வருகிறது? இப்படிக் காட்டுத்தனமாகக் கத்திக்கொண்டு வருகிறாயே!" என்றான் நெடுமாறன்.

செங்கணன் என்ற அந்த இளைஞனுக்குப் பதினேழு பதினெட்டு வயதிருக்கலாம். ஓடி வந்ததனால் அவனுக்கு மேல் மூச்சு வாங்கியது. ஆயினும் பற்களைக் காட்டியவாறு அவன் நெடுமாறனையும் இளமாறனையும் ஏதோ காணாததைக் கண்டது போல் மாறி மாறிப் பார்த்தான். லேசாகப் பழுத்திருந்த பூனைக் கண் அவன் பொது நிறத்துக்குப் பொருத்தமாகவும் அழகாகவுமே இருந்தது. கழுத்திலே கடற் சங்கு மணிகளும் பாசி மணிகளும் கோத்திருந்த மாலை ஒன்று அணிந்திருந்தான். தன்னையே கவனிக்கும் இளமாறனை ஒருமுறை பார்த்துவிட்டு மூச்சுத் திணறியபடியே அவன், "அண்ணா!" என்று அழைத்தான்.



"என்னடா?" நெடுமாறன் பொறுமையிழந்தவன்போலக் கேட்டுவிட்டுப் புன்னகை பூத்து நின்றான்.

"வடக்கத்திப் படை ஒன்று வருகிறது,

அண்ணு!'' செங்கணனுக்கு அதைச் சொல்லும்போதே மேலும் மூச்சு முட்டியது.

''படையா?'' - நெடுமாறனும் அதைக் கேட்டுத் திடுக்கிட்டான். ''மேற்கத்திக் காற்றில் எழும்பும் புழுதியைப் பார்த்துவிட்டுச் சொல்கிருயா?'' என்று அவசரத்தோடு வற்புறுத்திக் கேட்டான்.

''செங்கழுகை ஏமாற்றி விடலாம், அண்ணு. ஆனல் இந்தச் செங்கணன் கண்ணை ஏமாற்ற முடியாது! உனக்கு நம்பிக்கைப் படவில்லையா?''

''அவ்வளவு நிச்சயம் என்ருல் யாருடைய படை என்று கண்டுபிடிக்க முடிந்ததா?'' என்ருன் நெடுமாறன்.

''அது எப்படி அண்ணு எனக்குத் தெரியும்? அருகில் வந்தாலே எனக்கு யார் படை என்று தெரியாதே!''

நெடுமாறன் தோற்றத்திலே உண்டான பரபரப்பைக் கண்டு இளமாறனும் துணுக்குற்று நின்ருன்.

''எங்கே வா, பார்ப்போம்!'' என்று கூறிக்கொண்டே நெடுமாறன், செங்கணன் வந்த பாதையிலே ஓடத் தொடங்கினன். பின்னல் ஓடுவதா, வேண்டாமா என்று தயங்கிய இளமாறனும் செங்கணனும் ஒருவரை ஒருவர் முறைத்துப் பார்த்துக் கொண்டார்கள்.

''நீ யார்?'' என்ருன் செங்கணன்.

''நானு? நான் வந்து....காளிகோட்டை....''

''..நீ வந்து காளிகோட்டை மகாராஜாவோடே மகனுக்கும்! அப்படித்தானே?'' என்று கேட்டுவிட்டு, கடகடவென்று



பேரிடி முழங்குவதுபோல நகைத்தான் செங்கணன். அதற்குள் நெடுமாறன் குன்றில் பாதி உயரம் ஏறியிருந்தான்.

''அப்படியானால் கொஞ்சம் இப்படி வா! நல்ல சொரணை இருக்கிறதா, பார்ப்போம்!'' என்று மீண்டும் கூறிய செங்கணன், நெடுமாறன் ஏறுவதையே பார்த்துக்கொண் டிருந்த இள மாறன் காதைப் பிடித்துத் தூக்க முயன்றான்.

அவனுடைய கையை ஒரு தட்டுத் தட்டிவிட்டான் இளமாறன். ''உன்னைக் காட்டிலிருந்து யாராவது பிடித்து வந்தார்களா, அல்லது நீயாக வந்தாயா?'' என்றும் கோபமாகக் கேட்டான்.

''அடேடே, நல்ல சொரணை இருக்கிறதே உனக்கு?'' என்று சொல்லிவிட்டு, செங்கணன் மறுபடியும் சிரிக்கலானான்.

இளமாறனுக்கு நல்ல பசி; முதல் நாள் மதியத்தில் ஏதோ கொஞ்சம் கூழ் கிடைத்தது. அதற்குப் பிறகு ஒன்றும் இல்லை. பச்சைத் தண்ணீர்கூட அருந்தவில்லை. எனவே பைத்தியம் போல் சிரிக்கும் செங்கணன் அருகில் நிற்க முடியாமல் ஏரிகரைப் பக்கம் போனான்.

அவன் திரும்பியபோது நெடுமாறன் குன்றிலிருந்து வெகு வேகமாக இறங்கி வந்துகொண் டிருந்தான்.

''ஆமாம்; படையேதான் வருகிறது. காட்டு நாகர் படை! காளிகோட்டைப் பக்கம் போகத்தான் வருகிறது!'' என்று கூறிய நெடுமாறன் செங்கணனைப் பார்த்துக் கையைச் சொடுக்கி, ''இதுவும் நல்லதற்குத்தான்....செங்கணா! ஏரிகரைப் பக்கம் எங்காவது மேய்ந்துகொண் டிருக்கும் நம் குதிரையைக் கொண்டு வா! நானும் இளமாறனும் முன்னால் போகிறோம். நீ அப்புற மாகப் பூசாரியார் வண்டியைப் பூட்டி ஓட்டிக்கொண்டு காளி கோயிலுக்கு வந்து சேர்! சொல்வது புரிகிறதா?'' என்றான்.

''புரிகிறது - புரிகிறது - புரிகிறது!'' என்று பலமாகக் காட்டுத்தனமாகக் கத்திக்கொண்டே, நெடுமாறன் குதிரையைத் தேடி அழைத்துவர ஏரிப் பக்கமாக ஓடினான் செங்கணன்.

அப்படி ஓடிய செங்கணன், ''ஆனால் இது ஏது ஒரு குதிரை! எவனோ ஒருவன் ஏறி உட்கார்ந்திருக்கிறானே!'' என்று தன்னையே கேட்டுக்கொண்டான். பிறகு பின்னாலேயே நடந்து குடிசைக் குத் திரும்பினான்.

அவன் கண்டது உண்மைதான். ஏரித் தண்ணீரைக் குடித் துக்கொண் டிருந்தது ஒரு புதிய குதிரை. அதன்மீது இருந்த ஒரு வீரன், கையிலே நீண்ட ஈட்டி ஒன்றை வைத்திருந்தான்.

''அண்ணா, அண்ணா! அதோ பார்த்தாயா?'' என்று செங்கணன் காதோடு கூறிய திசையைப் பார்த்த நெடுமாறன் அப்படியே அசையாது நின்றான்.

(தொடரும்)




## 4. சம்பத்தின் ஏமாற்றம்

மாடிப்படிகளில் உருண்டு உருண்டு வந்து கொண்டிருந்த சுப்புவைப் பார்த்ததும் ஸ்ரீதரனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. குபீரென்று சிரித்துவிட்டான். ஆனால் சம்பத் மிகவும் கலவரமடைந்தான். ஓடிப்போய் அவனைப் பிடித்துக்கொண்டான்.

''என்ன நடந்தது, சுப்பு?..யார் உன்னைத் தள்ளினது?'' என்று பரபரப்புடன் கேட்டான். அதற்குள் சுப்புவின் கிழத்தாயாரும் தகப்பனாரும் அங்கே வந்து விட்டார்கள்.

சுப்பு, ''ஒண்ணுமில்லே....வந்து மாடியிலே ஜன்னல் வழியா..ஜன்னல் வழியா..என்ன வந்தது? ஒண்ணுமில்லையே!''

சம்பத்துக்குக் கோபம் வந்தது. ''டேய் அசடு!..சொல்லித்தொலை! ஜன்னல் வழியாக யாரேனும் வந்தார்களா''

''இல்லே! இல்லே! அதெல்லாமில்லே! சேச்சே..ஜன்னல் வழியா ஒரு பெருச்சாளி வந்து....ஒரே..அமர்க்களம்..நான் பாய, அது பாய...பெருச்சாளி விடுமா?...பெருச்சாளி பலே பெருச்சாளி போ..என் கழுத்தைப் பிடிச்சு..இல்லே காலைப்பிடிச்சு கவ்வி..''

''டேய் பேத்தல்!....போதும்! போதும்! பெருச்சாளிக்குத்தானா இந்த அமர்க்களம்?'' என்று கேட்டான் சம்பத்.

ஸ்ரீதரன் கலகலவென்று சிரித்தான். அதோடு சுப்புவும் அசட்டுச் சிரிப்புதான் சிரித்தான். சுப்புவின் தாயார் கவலையோடு, ''எங்கேடா அடிபட்டது?'' என்று விசாரித்தாள். ஆனால் சுப்புவின் தகப்பனார் ஒன்றுமே பேசாமல் வாசலுக்குப் போய்விட்டார். சம்பத் அப்புறம் சுப்புவோடு பேசவில்லை....அவனுக்கு அவன்மேல் சந்தேகம் விழுந்துவிட்டது. நிஜமாகவே அவன் அசடுதானா அல்லது வெறும் நடிப்பா என்று அவனால் நிச்சயம் செய்ய முடியவில்லை.

சம்பத்தும் ஸ்ரீதரனும் வெளியே வந்தார்கள். வாசல் திண்ணையில் அந்தக் கிழவனார் உட்கார்ந்திருந்தார்.

''போயிட்டு வர்றோம், தாத்தா!'' என்றான் சம்பத்.

''யார்டா, பையன்கள் நீங்க!''

''நாங்கள் தியாகராயநகரிலிருக்கோம்..''

''யார் பையன்டா நீ!''

சம்பத் அருகில் நெருங்கி, ''சப் இன்ஸ்பெக்டர் பட்டாபியின் பிள்ளை நான்'' என்றான்.

கிழவர் வாயைத் திறந்து மூடினார்.

''ஓஹோ! பட்டாபியா?..சரிதான்..நானே அவனைப் பார்க்கணும்னு இருந்தேன்; இப்ப ஊர்லே திருட்டு ரொம்ப ஜாஸ்தியாக இருக்கு..திருடன்கள் எல்லாம் பழங்காலம் மாதிரி இல்லே. இப்ப வர திருடன், 'சூட்' போட்டுண்டு வரான். பெரிய மனுஷன் மாதிரி பேசிப்பிட்டு அடிச்சுண்டு போயிடறான். 'ஹாட்டும் பூட்டும்' அவனைப் பார்த்தவுடன் மற்றவர்கள் மயங்கிவிடுகிறார்கள். உங்கப்பா கிட்டே சொல்லி வை..என்ன?''

''தெரியும் தாத்தா..எல்லாம் எங்கப்பாவுக்குத் தெரியும்.''

''அது சரிடா பயலே..ஒரு விஷயம் உங்கிட்டே சொல்லப் போகிறேன். நீ கவனிச்சுண்டு அப்பா கிட்டே சொல்லணும்''

''சரி! சொல்லுங்கோ சீக்கிரம்''

''அடுத்த வீட்டிலே மாடியிலே குடியிருக்கான் ஒருத்தன்...பக்காத் திருடன், கஜத்திருடன்...ஆள் பார்த்தா யாரோ பெரிய மனுஷன் மாதிரி இருக்கும்...இவன் ராத்திரி ராத்திரி எங்கேயோ போறான், வர்றான். இரண்டு மூன்று ஆட்கள் இருக்கான்கள். போக்குவரத்து நடத்தை ஒண்ணும் சரியா இல்லே.''

''ஏன்! தாத்தா! ஆள் அடையாளம் சொல்லுங்கோ.''

''குட்டையா இருப்பான். கறுப்புக் கண்ணாடி...அதுவும் 'பிரேம்' இவ்வளவு தடியன்...சூட் போட்டுண்டு...கையிலே ஒரு சாவியைச் சுத்திண்டு திரிவான்.''

''சரி சொல்லுங்கோ உங்க சுப்பு..''

''அதான் சொல்றேனே!..சுப்பு படு அசடு. அந்தப் பயங்க பேச்சைக் கேட்டு ஏதோ பண்றான். இவனுக்கு ஆபத்து வராமெ இருக்கணும்.''

''அது சரி மாடியிலே...''

''அடேடே சொல்றதைக் கேளு! மாடியிலே அந்தத் திருட்டுப் பயதான், இவனை உதைச்சிருக்கான். எதுக்கோ தெரியல்லே.''

''ஐயோ! அப்ப திருடன் மாடியிலே இருக்கானா?''

''இல்லேடா அம்பி! அந்த மாடியிலிருந்து இந்த மாடிக்கு வர வழியிருக்கு!''

''எப்படி?''

''ஜன்னலைத் தூக்கினால் அது மேலே போகும்.''

''சரிதான்..''

''அவன் அப்பவே அடுத்த வீட்டுக்குப் போயிட்டான். அப்புறம் வீட்டையும் பூட்டிண்டு வெளியே கிளம்பிட்டான்.''

''அப்போ தாத்தா, நம்ம மாடியிலே இருக்கிற ஜன்னல் வழியா..''

''போடா! அசடு! அவன் வீட்டு மாடிப்பக்கம்தான் அதைத் திறக்க வழி. அதைப் பூட்டியிருக்கான்.''

''அப்போ அடுத்த வீட்டிலே ஒருத்தரும் இல்லே .''

''ஏன் இல்லே! காவல்காரன் வேலப்பன் இருப்பான். வேட்டை நாய் மாதிரி....''

''எங்கே வாசல்லேயா?''

''ஆமாம்....''

''அப்ப நாங்க வர்றோம். அடுத்த வீட்டுக்குள்ளே போய்ப் பார்க்கட்டுமா?''

''சரி! சரி! ஆனா..ஜாக்கிரதை..''

''சரி, தாத்தா..'' சம்பத்தும் ஸ்ரீதரனும் எழுந்துவிட்டார்கள். வெளியே வந்து பார்த்தார்கள்.

''ஏன் சம்பத்! பேசாமல் வீட்டுக்குப் போகலாமே!''

''ஸ்ரீதரா! என்ன இப்படிச் சொல்லிப்பிட்டே? இந்தச் சந்தர்ப்பத்தை விட்டா வேறு கிடைக்காது. அந்தப் பெட்டியை எப்படியானும் எடுக்கணும்...வா, சொல்றேன்.''

அடுத்த வீட்டுக் கேட்டுக்கு வந்தார்கள். ஸ்ரீதரனுக்கு மனது 'திக் திக்' கென்றது.

''யாரையா நீ?..'' என்ற குரல் கேட்டது.

''யார், வேலப்பன்தானே?''

''யார் ஐயா...நீங்க?'' என்று அதட்டினான்.

''நான் யாருன்னு கேட்கிறே? இந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் யாரோ, அவருக்கு வாரிசு நான்..'' என்று சொல்லிவிட்டுக் கலகலவென்று சிரித்தான் சம்பத்.

''யார்! பரமானந்த முதலியார் பையனா? சின்ன எஜமானா?''

''ஆமாம்! வேலப்பா...''

''வாங்க! வாங்க! அடடா இப்



படி உட்காருங்க...என்னங்க இந்த வேளையிலே...''

''என்ன 'டிரெயின்' இப்பத்தானே வருது. ஐயா உன்னையும் அவசியம் பார்த்துட்டு வரச் சொன்னார்.''

''உக்காருங்க! என்ன விசயம்?''

''இந்த வீட்டுக் குடித்தனக் காரங்க வாடகை பாக்கி..அதை வாங்கணும். அவங்க இருக்காங் களா?''

''இல்லீங்களே!....இல்லைங்க இருக்காங்க மாடியிலேதானே! தூங்கியிருப்பாங்களே ...காலையிலே பாருங்களேன்...''

''அட காலையிலேயே, அது வரைக்கும்...''

''வாங்க, கதவைத் திறந்து விட றேன். உள்ளே படுத்துக்குங்க. அவங்க மாடியிலேதாங்க இருக் காங்க. காலையிலே எழுந்திருச்சுப் பாத்துக்கலாம். அவங்க மாடிக்கும் கீளேயும் கனெக்ஷன் கிடையாது.''

''சரி திறந்துவிடு...'' என்று அசுவாரஸ்யமாகச் சொன்னான் சம்பத்.

''இது யாருங்க?'' என்றான் வேலப்பன்.

''தெரியல்லையா, வேலப்பா? எங்க சித்தப்பாரு மகன்...''

''ஆமாங்க, மறந்துட்டேங்க... சின்னப்புள்ளையா இருக்கிறபோது உங்களை எல்லாம் தூக்கி எடுத்து வளர்த்தவனுங்க நானு...''

''சரி, தூக்கம் வர்றது...'' என்றான் சம்பத்.

வேலப்பன் கதவைத் திறந்து விட்டான். இருவரும் உள்ளே போனார்கள்.

''வேலப்பா! நீ போகலாம்! நான் தூங்கணும்...''

வேலப்பன் வெளியே போனதும் கதவை ஓசைப்படாமல் உட்பக்கம் தாளிட்டான். விளக்கை அணைத்து விட்டுக் கட்டிலில் உட்கார்ந்து யோசனை செய்தார்கள். சிறிது நேரம் கழித்து ஓசைப்படாமல் மாடிக்குப் போனான் சம்பத். மாடிக் கதவைச் சாத்திப் பூட்டி யிருந்தது. ஸ்ரீதரனும் மெல்லப் பின் தொடர்ந்தான். கட்டிலில் இரண்டு தலையணைகளைப் போட்டு ஆள் படுத்திருப்பதுபோல் செய்து வைத்திருந்தார்கள். மாடிக்கதவுப் பூட்டை இழுத்துப் பார்த்தான், சம்பத். பூட்டு பலமாக இருந்தது.

மேலும் கீழும் கொஞ்சம்தான் இடைவெளி இருந்தது. மரக்கதவு தான்! அதை எப்படிப் பெயர்த்து எடுப்பது. கீல் இருந்த இடத்தில் ஸ்குரூவைப் பெயர்த்தால் கதவு கையோடு வரலாம்...ஸ்குரூவைக் கழற்றினன் வேகமாக! நல்லவேளை கதவு எப்படியோ திறந்து கொண்டது. ரொம்ப அசிரத்தையாகக் கதவை ஏன் இப்படி விட்டு விட்டுப் போய்விட்டார்கள்..எப்படியானுல் என்ன? இப்பொழுது அவசரமாகக் காரியத்தைப் பார்க்க வேண்டும். அவர்கள் திரும்பி வருவதற்குள் காரியம் முடியவேண்டும்...சமயோசிதமாக நடந்துகொள்ள வேண்டியது அவசியம்....பார்க்கலாம்... ஓசைப்படாமல் இருவரும் மாடிப் படிகளில் ஏறினுர்கள். ஒரே இருட்டு! சம்பத் கையோடு டார்ச் கொண்டுவந்திருந்தான். டார்ச் வெளிச்சம் அவர்களுக்கு வழி காட்டியது. அறைக்குள் மெல்ல நுழைந்து வெளிச்சத்தை அறையின் நடுவே செலுத்தினுன். அங்கே...!

'ஹா'வென்று ஒரு நிமிஷம் வாயைப் பிளந்தார்கள். அறையின் நடுவே ஒரு சிறிய கட்டில். அந்தக் கட்டிலைச் சுற்றிக் கொசு வலை கட்டியிருந்தது. அந்தக் கட்டிலில் படுத்துத் தூங்கிக்கொண் டிருந்த உருவம்..கறுப்புக் கண்ணுடிக் காரன் தானு?....அல்லது வேறு யாராவதா..? இருட்டில் ஸ்ரீதரனின் கை நடுங்கியது. சம்பத்திற்குத் தெரிந்தது. சம்பத் வாயில் கையை வைத்து ஸ்ரீதரனைச் சத்தம் போடாமலிருக்கும்படிச் சைகை செய்தான். ''ஸ்ரீதரா, அறையின் வாசற்படியில் நில்....யாராவது வந்தாலும்..'' என்று ரகசியமாகக் காதோடு சொன்னுன். ஸம்பத் வெகு தைரியமாகத் தேட ஆரம்பித்தான். ஸ்ரீதரன் சுவரோடு சுவராக அறையின் வாசலில் நின்றுன். நல்லவேளையாகக் கட்டிலில் கிடந்த உருவம் தூங்கிக்கொண்டே இருந்தது. பீரோக்களை எல்லாம் திறந்து திறந்து பார்த்தான். அவற்றிற்கெல்லாம் சாவி எங்கே சம்பத் வைத்திருந்தான்? அது ஸ்ரீதரனுக்குப் புரியவில்லை. சம்பத்தின் திறமையை நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவு நிதானம்! எவ்வளவு பொறுமை! எவ்வளவு தைரியம்! அவன் தேடும் போது கொஞ்சம்கூட சத்தம் கேட்கவில்லை. அந்தக் கட்டிலில் படுத்துறங்குவது யார்?..உறங்குகிறுர்களா?..மயக்கமா?..ஒரு வேளை..கொலை செய்து..என்ன பயங்கரம்! எதுவானுல் என்ன? சம்பத்திற்கு வருகிற ஆபத்து நமக்கும் வரட்டும். நேரம் நகர்ந்தது. ஆமை வேகத்தில் 15 நிமிடங்கள் தேடியாகிவிட்டது. சம்பத் அலுத்துப் போய்விட்டான். இரண்டு பெரிய இரும்புப் பீரோக்கள், டேபிள், அலமாரி எல்லாம் தேடியாகிவிட்டது. அந்த இரும்புப் பெட்டி இல்லை..எங்கும் இல்லை. மூட்டையும் இல்லை; அந்தப் போலீஸ் உடைகள் எதுவும் இல்லை. ஒரு வேளை ஏமாற்றம்தானு?.. ஏமாந்து விட்டோமா? மெதுவாக ஜன்னல் ஒன்றைத் திறக்க முயற்சித்தான். ஜன்னலின் ஓரத்தில் நான்குபுறம் கம்பி ஓடிக்கொண்டிருந்தது. ஓரத்தில் சிறிய கைப்பிடி ஒன்று இருந்தது. கைப்பிடியைத் திருகினுன். ஜன்னல் மெதுவாக மேலே சென்றது. அடுத்த வீட்டிற்கும் அந்த அறைக்கும் உள்ள பொதுவான ஜன்னல் அது. ஏற்கனவே இரண்டு வீடும் ஒரே வீடாக இருந்தது போலும்! அதைப் பயன் படுத்திக்கொண்டிருக்கிறுர்கள் இவர்கள். கதவைத் திறந்தபடியே வைத்தான். ஒரு கணம் யோசித்தான். எங்கே போயிருக்கும் அந்த மூட்டை! நேரமோ ஆகிறது! அதே சமயம்.. கட்டிலில் கிடந்த உருவம் புரண்டது..முனகியது...சம்பத் சடாரென்று கீழே குனிந்து கட்டிலுக்கடியில் போனுன். கட்டிலின் கீழ் படுத்திருப்பது யாருக்கும் தெரியாமல் துணித் திரை மறைத்துக்கொண்டிருந்தது. நல்லவேளை! எழுந்திருந்து பார்த்தாலும் தெரியாது. ஆனுல்..ஆனுல்..ஐயோ ஸ்ரீதரன்....!

(தொடரும்)



# நான் யார்?

'கேயார்'

சுந்தரம் இருக்கிறாரே! அவருக்கு எங்கேயாவது வெளியே போகவேண்டுமானால் சரி, என்னையும் கண்டிப்பாக அழைத்துக் கொண்டுதான் போயாகவேண்டும். ஆமாம்! என்னுடைய கை அவருடைய கையில் பதிந்திருந்தால்தான் அவருக்கு நடக்கவே தெரியும்! படபடக்கும் வெயிலானாலும் சரி, கொட்டிக் கொட்டிக் கும்மாளமடித்து, இந்தப் பூமியைத் தன்னால் முடிந்தவரை எவ்வளவு சகதியாக்க முடியுமோ, அவ்வளவு சேறும் சகதியுமாக்கும் மழையானாலும் சரி, நானும் அவருடன் கண்டிப்பாக அழைத்துச் செல்லப்படுவேன். இது அவருக்கு ஒரு தவிர்க்க முடியாத பழக்கமாகி விட்டது.

ஒரு நாள்! நல்ல வெயில்! அன்றைச் செய்தித்தாள்களில் எல்லாம் 'உக்கிரமான உஷ்ணம்' என்ற தலைப்பின் கீழ் சீதோஷ்ண நிலை விவரங்கள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன. சும்மா ஒரு ஆளையே உருக்கித் தண்ணீராக ஓடச்செய்துவிடும் போல், அவ்வளவு உக்கிரமமான வெயில்! இந்த வெயிலிலும் அந்தச் சுந்தரத்திற்கு என்னதான் காரியம் இருக்குமோ? நடுப்பகலில், என்னையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டார். எனக்கு எவ்வளவு வேதனையாகத் தெரியுமா இருந்தது? ஆனால் என் கஷ்டம் அவருக்கு எப்படித் தெரியும்? சுத்த உணர்ச்சியற்ற ஜடம்! எனக்குமாத்திரம் பேச முடியுமானால் அவரை, சும்மா பேசிப் பேசியே பிராணனை வாங்கி அணு அணுவாக அழித்து உறிஞ்சியிருப்பேன்! உம்..என்ன செய்வது? நான்தான் பேச முடியாத ஊமையன் ஆயிற்றே! 'கார்..புர்ர்.. கடா..புடா..' என்று இப்படிப்பட்ட பல கோரமான அலறல்கள் மூலமாகவேதான் நான் என் அதிருப்தியையோ, அல்லது எனக்கு நேர்ந்த ஆபத்தையோ தெரிவிப்பேன்!...சரி...சரி...இப்போது அதைப்பற்றி என்ன வந்தது? மேலே படியுங்களேன்! நான் படும் அவதியை!....

தெருவிற்கு என்னை இழுத்து வந்தார் சுந்தரம். அவருடன் நானும் கட்டாயமாகக் கிளம்பித் தானே ஆகவேண்டும்! வேறு வழி? அவருடன் புறப்பட்டேன்! அவர் நடந்தார்! நடந்தார்!! நடந்தார்!!! அப்படி நடந்தார்! சே, சே! இந்த மனுஷனுக்கு வலி என்பதே கிடையாதோ! அவருக்குத்தான் சொரணையே கிடையாதே! ஹூம்! அடிக்கின்ற வெயிலெல்லாம் என் தலையில்தான். அப்படியே பொசுக்கித் தள்ளிவிடுவதுபோல் இருந்தது!

என்னுல் தப்பித்து ஓடவும் முடியவில்லே! அவருடைய பிடி வெயில் ஏறஏற, இறுக ஆரம்பித்ததே தவிர, எனக்கு என் பரிதாபகரமான நிலேமையைப் பார்த்து, விடுதலே அளிக்க முன்வரவில்லே.

அரை மணியாக நடந்து நடந்து சுமார் இரண்டு மைல் வந்தார். அப்பாடி! ஒரு வழியாக எனக்கு விடுதலே கிடைத்தது. ஆமாம்! பக்கத்திலிருந்த ஒரு வீட்டிற்குள் அவர் நுழைந்தார். அவர் நண்பர் அந்த வீட்டில்தான் இருக்கிருராம்!(நாசமற்றுப் போக அவர்!) அந்த வீட்டுக்குத்தான் போனுரே! என்னே ஏதாவது ஒரு நல்ல கௌரவமான இடத்தில் உட்கார வைத்தாரா? அதுதான் இல்லே! நான்தான் அவருக்கு ஒரு கைப்பிரம்பாக இருக்கிறேனே! எனக்கு எங்கே அவர், கௌரவம் அளிக்கப் போகிருர்?

அந்த வீட்டில் ரேழியில் ஒரு மூலேயில் என்னே உட்கார வைத்து விட்டார்! எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. என் உடல் துடித்தது. என்னுடைய கோபாவேசம் என்னேப் பிடித்து உலுக்க, அவர் வேறு என்னே, அலட்சியமாக கழுத்தைப் பிடித்து மூலேயில் தள்ள, நான் 'தடா'லென்று குப்புற வீழ்ந்தேன்! ''அடடா!'' என்று கத்திக் கொண்டே என் இடுப்பைப் பிடித்து அப்படியே தூக்கி மூலேயில் தள்ளிவிட்டு, உள்ளே நண்பரோடு பேச ஆரம்பித்துவிட்டார். ஈவு இரக்கமற்ற பாதகன்! கீழே விழுந்தேனே! அடிகிடி ஏதாவது பட்டுவிட்டதா என்று பார்க்கக் கூடாதா? என்ன அலட்சியம் பாருங்கள்! எனக்கல்லவா தெரியும், கீழே விழுந்ததில் என் கை லேசாகச் சிராய்த்து விட்டிருப்பது!

அத்தனே வெயிலேயும் தாங்கிக் கொண்டதால், சும்மா 'எலக்ட்ரிக் ஹீட்டர்' மாதிரி என் உடல் தகித்திருக்கவும், நான் விழுந்த சமயம் அவர் என் உடலேத் தொட்டுத் தூக்கி யிருக்கிருர்! பாவம்! நன்ருகச் சுட்டுவிட்டதுபோலும்! ஆனுல் அது எங்கே அவருக்கு உறைத்தது? உணர்ச்சியற்ற மரக்கட்டையாயிற்றே அது! 'ஹி..ஹி..' என்று இளித்துக் கொண்டே போய், தன் நண்பரிடம், முகத்தில் அசடு, சும்மாப் பிரவாகமாகப் பெருக்கெடுத்தோட,''இன்னிக்கு..இருந்தாலும் வெயில் ஜாஸ்திதான்!'' என்று பேத்துப் பேத்தென்று பிதற்றியது! எனக்கு அப்போது எப்படித் தெரியுமா இருந்தது! என் உடலெல்லாம் அப்படியே பற்றி எரிந்தது!

வெகு நேரம் அந்த மூலேயிலேயே 'சிவ சிவ' என்று உட்கார்ந்து கொண்டிருந்தேன். ஆனுல் அவர் வருகிறவழியாகக் காணேம்! நேரம் ஓடிக்கொண்டே யிருந்தது!

இரவு மணி எட்டடித்த பிறகு தான் இவருக்கு இருட்டிவிட்டது தெரிந்தது! அந்தச் சமயம் பார்த்துத் தானு, இந்தப் பாழாய்ப் போன மழை வந்து தொலேய வேண்டும்? முதலிலே நான் நினேத்தேன், அவர் எங்கே இந்தக் கொட்டும் மழையில் போகப் போகிருரென்று! ஆனுல் அந்த மனுஷன் ஓர் எருமை மாடுதானே! அது பாட்டுக்குக் குஷியாகக் கிளம்பி விட்டது! நான்தான் ஒருத்தன் கூட இருக்கிறேனே, அவருக்குப் பதில் மழையில் நனேய! என்னேயும் இழுத்துக் கொண்டு கிளம்பிவிட்டது.

சும்மா, மழை யென்ருல் அப்படி இப்படியென்று மழையில்லே! வெளுத்து வாங்கிவிட்டது? பகல் பூராவும் காய்ந்த வெயிலுக்காக, இரவு பழிக்குப் பழி வாங்கி விட்டது! ஆமாம்! பகல் பூராவும் வெயிலில் காய்ந்தேன். இப்போதோ! மழையில் நனேகிறேன்! அந்த மனுஷன் என்னேக் கவனித்தால்தானே! தன் வேலே முடிந்தால் போதும் அவருக்கு! சொட்டச் சொட்ட நனேந்துகொண்டே அவருடன் வந்தேன். ஒவ்வொரு மழைத் துளியும் ஈட்டிபோல் என் உடலேக் குத்திக் குத்தி வாட்டி எடுத்து விட்டது. இரவில் பெய்யும் இந்த மழையைவிட பகலில் காய்ந்த அந்த வெயிலே மேலாகப் பட்டது எனக்கு!

ஒரு வழியாக வீடு வந்து சேர்ந்தேன்! வீட்டிற்குள் அழைத்துச் சென்ருரோ என்னே என்ருல், அது

தான் இல்லை! தன் ஐந்து வயதுப் பையனைக் கூப்பிட்டுக்கொண்டே, (அதுதான் அந்த ராமுடு! முத்து வாமே முத்து! நாலு மொத்து மொத்தினுல் என்னவென்று தோன்றுகிறது! என்னமாப் பற்றி எரிகிறது தெரியுமா என் உடல், இந்த மழையிலும்!) என்னை வாசல் திண்ணையில் உட்கார்த்தி வைத்து விட்டார்! முத்துவிடம், ''டேய்! இங்கேயே பார்ந்துக்கொண் டிரு! உள்ளே யெல்லாம் ஒரே ஈரமாயி டும்னுதான் வெளித்திண்ணையி லேயே....'' என்று சொல்லி முடிப்பதற்குள், அவரை அவன் இடைமறித்து, ''ஓ! சரியப்பா.. சரி!'' என்று நீட்டி முழக்கிக் கொண்டே என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டான்!

எனக்குத் துக்கம் தாளவில்லை. அந்தச் சமயம் என் துக்கத்தை யெல்லாம் கண்ணீராக வடிக்க எனக்கு ஆயிரமாயிரம் கண்கள் தேவையாயிருந்தன என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்!

பக்கத்தில் உட்கார்ந்திருந்த இந்தப் பிஸ்துவாவது பேசாமல் இருக்கக் கூடாதா! என்னைப் பார்த்துவிட்டு எத்தனை இளக்காரம் தெரியுமா செய்தான்? நேரம் செல்லச் செல்ல என் மீது கையையே போட ஆரம்பித்து விட்டானே!

வேடிக்கைக்குத்தானே என்று நானும் பேசாமல் இருந்தேன். ஆனுல் அந்த வேடிக்கை என் வாழ்க்கைக்கே உலை வைக்கும் என்று கண்டேனு? ஒரு துருப் பிடித்த 'ப்ளேட்' (Blade) எங்கிருந்துதான் கிடைத்ததோ! அதை முதலில் லேசாக என் தோலின்மீது இழுத்தான்! என் உடல்தான்





மீசைக்காரர்: நான் நம்ம ஊர் எலெக்‌ஷனுக்கு நிக்கலாம்னு நினைக்கிறேன். நீங்க உங்க ஓட்டை யாருக்குப் போடறதா முடிவு பண்ணியிருக்கீங்க?

மற்றவர்: இதைக் கேக்கணுமா? அவசியம் உங்களுக்குத்தான்....

---

வெயிலிலும் மழையிலும் காய்ந்து, நனைந்து, மரத்துப் போய்விட்டதே! அவனுடைய செய்கைகளில் உணர்வை நான் துளிக்கூட அறியவில்லை! அவன் சற்று அழுத்தித் தன் கையை என்மீது ஓட்டினான்! பொறுத்துக் கொண்டு, அறிந்தும் அறியாமல் இருந்தேன்! ஆனால் திடீரென்று அவன் அந்தப் ப்ளேடினால் நன்றாக அழுத்தி என்தோலை ஏழெட்டு இடங்களில் கீறிவிட்டான்! நான் துடித்துப் போய்விட்டேன்! அதற்குள் அவர்—அதுதான் அந்தச் சுந்தர எருமை—வந்து விட்டார்! அந்தப் பயலைப் ‘பளார் பளா’ரென்று முதுகில் நாலு அறை கொடுத்துத் துரத்தி விட்டு என்னிடம் வந்தார்! ‘‘அடாடா! த்சொ த்சொ!’’ என்று பரிதாபப் பட்டார்!

ஐயோ! அப்படியே இரக்கம், சும்மா வெள்ளப் பெருக்கெடுத்துத்தான் ஓடுகிறது! என்னை ஆதரவாகத் தொட்டுத் தடவி ஏதாவது சிகிச்சை செய்தாரா? அந்த நல்ல வழக்கம்தான் அவருக்கு ஒரு நாளும் வராதே! அப்படியே என்னைத் தூக்கிக்கொண்டு போய், வீட்டினுள்ளே ஒரு தனிப்பட்ட இடத்தில் தள்ளி விட்டார்!

‘நான் என்ன பாவம் செய்தேன்? என்னை ஏன் இப்படி வெறுத்து ஒதுக்கி வைக்கிறார்?’ என்று எத்தனை நாள் அந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டு மனம் புழுங்கினேன் தெரியுமா? ஒரு நாளா, இரண்டு நாளா? அப்பப்பா! நினைத்தாலே பயங்கரமாயிருக்கிறதே! சுமார் ஒரு வருஷம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! உங்களை அப்படி வைத்தால் உங்களுக்கு எப்படி இருக்கும்?

நடுநடுவே எனக்குக் காய்ச்சல் வர ஆரம்பித்தது! பிறகு அதுவும் பழக்கப்பட்டுவிட்டது! அந்த முசுடு இருக்கிறதே முத்து! என்னைச் சும்மா ‘தெமை தெமை’யென்று ‘தெமை’த்து விட்டான்! கால் சுளுக்கிக் கொண்டு, கை சுளுக்கிக் கொண்டு, ‘மரணவஸ்தை’ என்று சொல்லுவார்களே, அந்த அவஸ்தையைத்தான் அநுபவித்தேன். காலம் ஓடியது! ஒரு நாள்—

அவர் வந்தார்! நான் என் உடலைச் சுருட்டிக் கொண்டு, பயந்து கொண்டே மூலையில் படுத்துக் கிடந்தேன்! அதுகூட அவருக்குப் பொறுக்கவில்லை! என்ன செய்தார் தெரியுமா?

‘‘அட சே! யாருடைய வேலை இது! இந்தச் சனியனை இங்கே போய்..ம்..நாலு பேரு நடமாடற இடம்..’’ என்று முனகிக் கொண்டே என்னைச் சும்மா அலாக்காகத் தூக்கி விட்டெறிந்தார்! எங்கே தெரியுமோ?

ஒட்டடையும், சிலந்திக்கூடும் நிரம்பிய, எங்களைப் போன்றவர்க்கத்தினருக்கு, சுடுகாடாகிய, அந்தப்.. பரண்மேலே!

ஆமாம்! அப்படிப்பட்ட ‘நான்’ யாரென்று தெரியவில்லையா உங்களுக்கு? நான்தான் மிஸ்டர் குடை!



# விளம்பர அதிசயங்கள்

தே. பார்த்தசாரதி

### முன்னுரை:

இது விளம்பர யுகம். காலையில் பேப்பர்களைப் பிரித்தாலும் சரி, மாலையில் ரேடியோ ஸிலோனைத் திருப்பினாலும் சரி, அல்லது சுவர்களிலும் சரி-எங்கும் விளம்பர முழக்கந்தான் காண்கிறோம். விளம்பரங்களுக்குத் தப்பிய இடமே இல்லை. நடுரோடுகளில் கூட அல்லவா, "எமது கத்திரி மார்க் செருப்புகளையே உபயோகியுங்கள்" என்று விளம்பரங்கள் தென்படத் தொடங்கி விட்டன! இவையெல்லாம் போதாவென்று 'விளம்பர வார'ங்கள் வேறு கொண்டாடுகிறார்கள். இவ்வாறு எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் விளம்பரங்களைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, சில புது மாதிரியான விளம்பரங்கள் என் மனத்திரையில் தோன்றி மறைந்தன. அவற்றைத்தான் இங்கே, "விளம்பர அதிசயங்கள்" (அதிசய விளம்பரங்கள் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்) என்ற தலைப்பில் கொடுக்க முன் வந்திருக்கிறேன். இவை உண்மையான விளம்பரங்கள் என்று எண்ணி ஏமாந்து விடாதீர்கள்!

### 1. பாரீர்! வாரீர்!

எமது "கூஜா மார்க் குடை"களையே வாங்குங்கள், நயமான சரக்கு. விலை மலிவானது. மழைக் காலத்திலும் சரி, வெயில் காலத்திலும் சரி, உங்கள் மண்டையைக் காக்கும் என்ற உத்தரவாதத்துடன் தருகிறோம். எமது கடைக்கு ஒரு முறை விஜயம் செய்தால், அடிக்கடி வருவீர்கள், திருப்தியில்லையேல், குடை வாபஸ் பெறப்படும்; பணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

விவரங்களுக்கு:
கூஜாமார்க் குடை வியாபாரிகள்,
தாஜாப்பட்டண வீதி,
ராஜாநகர்.

* * *

### 2. இன்றே வாங்குங்கள்!

கடவுளரில் முதல்வர் கணேசன்
நடிகர்களில் சிறந்தவர் கணேசன்
பீடிகளில் உயர்ந்தது கணேசர் பீடிகளே!

இன்றே வாங்குங்கள்! நன்றே ஓங்குங்கள்!

நேரில் விஜயம் செய்யவும்:
பீடி அண்ட் பீடி மானுபாக்சரார்ஸ்,
4, தாடிப்பேட் ரோடு,
மாடிபுரி.



## 3. "அரோகரா பாஷாணம்"

தலைவலியால் அவதியுறுகிறீர்களா? பல்வலியால் பதறுகிறீர்களா? மூக்கு வலியால் முனகுகிறீர்களா?

அப்படியானுல் இன்றே ஒரு பாட்டில் ''அரோகரா பாஷாண''த்தை வாங்கிப் பாவியுங்கள். அறுபதே விநாடிகளில் வலி பறந்துவிடும். பத்துப் பாஷாணங்கள் அடங்கிய ஒரு பாட்டில் விலை 13 நயே பைசேதான்.

எல்லா வெற்றிலைப் பாக்குக் கடைகளிலும் கிடைக்கும்.

* * *

## 4. அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி!

அதோ சினிமா நடிகை சின்னக்குட்டி என்ன சொல்கிருள், கேளுங்கள்: ''நான் கடபுடா கூந்தல் தைலத்தையே உபயோகிக்கிறேன். அதனுல்தான் எனது கூந்தல் இவ்வளவு அழகாகவும் நீளமாகவும் இருக்கிறது. நீங்களும் அதையே உபயோகியுங்கள்.'' பார்த்தீர்களா, நீங்களும் எமது கடபுடா கூந்தல் தைலத்தையே உபயோகித்தீர்களானுல், கூந்தல் ராணிகளாக விளங்குவீர்கள். உடனே வாங்குங்கள் கடபுடா கூந்தல் தைலம். பாட்டில் உட்பட தைலத்தின் விலை ரூபாய் ஒன்றுதான்!

* * *

## 5. வாரீர்! திரண்டு வாரீர்!

தலைமயிருள்ள தமிழர்களுக்கெல்லாம் இதன் மூலம் நாங்கள் தெரிவிப்பது என்னவென்ருல், அன்பர்களின் அபிமானம் பெருகிவிட்டதன் காரணமாக எங்கள் கடை பழைய இடத்தை விட்டுப் புதிய கட்டடத்திற்கு வந்துவிட்டது. ஆகவே, எம் வாடிக்கைக்காரர்கள் அனைவரையும் இந்தப் புதிய விலாசத்திற்கே வந்து சவரம் செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிருேம்.

மொட்டை அண்ட் மொட்டை,
8, ஆண்டிப் பண்டாரத் தெரு,
அப்பளாக்குடுமிநகர்.

பி-கு: சகலவிதமான சவரங்களும் மலிவான சார்ஜில் மழுங்கச் செய்யப்படும்.

* * *

## 6. வெளி வந்துவிட்டது!

நேயர்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பிரபல எழுத்தாளர் 'அணுக்குண்டு' எழுதிய, 'தண்டவாளமும் வண்டவாளமும்' என்ற நாவல் மலிவுப் பதிப்பாக வெளி வந்துவிட்டது. இதில் வரும் ரெயிலைப் போன்ற ஒரு கதாபாத்திரத்தை வேறு எந்த ஆசிரியருமே இதுவரையில் சிருஷ்டித்தது கிடையாது. அறுநூறு பக்கங்களில் ஓர் உயர்ந்த கதையை அளிக்கிருர் ஆசிரியர். பிரதிகள் வேண்டுவோர் ரூபாய் ஒன்றரை ''இஞ்சின் பதிப்பகம், சென்னை-17'' என்ற முகவரிக்கு அனுப்பவும். வி. பி. பி. மூலம் பிரதிகள் அனுப்பப்படமாட்டா.

## 7. விரைவில் எதிர்பாருங்கள்!

தமிழ்த்திரைப் படவுலகில் ஒரு புரட்சி!

உங்கள் அபிமான நடிக நட்சத்திரங்கள் நடிக்கும், வரட்சி பிக்சர்ஸ் தயாரித்த ''புரட்சி'' விரைவில் வெள்ளித்திரைக்கு வரவிருக்கிறது. கிளர்ச்சிதாஸன் கதை - வசனம், டைரெக்ஷன். கண்ணுக்கினிய காட்சிகள், காதுக்கினிய கானங்கள் நிறைந்தது! காணத் தவருதீர்!

* * *

## 8. பாலர்களுக்கு ஒரு பத்திரிகை!

தமிழ் நாட்டுத் தம்பி தங்கைகளே! உங்களுக்காக - உங்களுக்கே உங்களுக்காக - ஒரு பத்திரிகை ''கொக்கரக்கோ.'' கோழிநாதனை ஆசிரியராகக் கொண்டு அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து வெளிவருகிறது! இனிக்கும் சிறுகதைகள், ஹாஸ்ய வெடிகள், தேன் சொட்டும் கவிதைகள் எல்லாம் நிறைந்தது! பிரதிகள் உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கவேண்டுமானல், இன்றே ஆண்டுச் சந்தாதாரராகச் சேருங்கள்.

லட்டுப் பதிப்பகம்,
த. பெ. எண் 111,
அமுமூஞ்சிபுரம்.

* * *

## 9. தேவை! தேவை!

நான் ஓர் இளம் எழுத்தாளன். நான் எழுதியுள்ள, 'இவர்கள் தலையில் இடி விழுந்தால்?', 'இராமாயணத்தில் இடியாப்பம்', 'வெல்லச் சீடையும் ஔவையாரும்' முதலான ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடத் துணிவுள்ள ஒரு தமிழ்ப்பத்திரிகை தேவை. கட்டுரைகளைப் பிரசுரிக்க விரும்பும் பத்திரிகை ஆசிரியர்கள் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதவும்:

எழுத்தாளர். ''ஈர்க்குச்சி'',
5, ஒல்லிப்பட்டரைத் தெரு,
தடுக்கிவிழுந்தான் பேட்டை,

* * *

## 10. வாங்கத் தவருதீர்கள்!

அன்பர்களின் திருப்தியே எங்கள் திருப்தி!




எங்கள் கடையில் புது மாடல் சைக்கிள்கள் பல உற்பத்தி செய்திருக்கிறோம். அன்பர்கள் அவை வரும் வாங்குவதற்காகக் குறைந்த விலையில் அவற்றை விற்பனை செய்ய முன் வந்துள்ளோம். ஒரு சைக்கிளின் விலை ரூ. 25 தான். உங்களுக்குப் பிடிக்காதவர்களுக்குப் பரிசளிக்கலாம். மிக உயர்ந்த ஸீட். அதில் ஏறிப் போகும் போது தேசிங்குராஜன் குதிரையில் ஏறிச் சவாரி செய்வது போன்ற இன்பத்தையும் குஷியையும் பெறுவீர்கள். ஒரு முறை பரீட்சித்துப் பார்த்தே வாங்கலாம். அதிலிருந்து கீழே விழுந்து கை, கால், பல் உடைந்தால் நாங்கள் ஜவாப்தாரிகளல்ல!

உடனே விஜயம் செய்யுங்கள்:
அக்கு வேறு ஆணி வேறு மார்ட்,
1/2, ஆடியபாதம் 4-ஆம் குறுக்குச் சந்து, கோணல்பாக்கம்.

* * *

## 13. விளம்பரத்துக்கு விளம்பரம்!

வியாபாரிகளே! நீங்கள் எம் பத்திரிகையில் விளம்பரம் செய்வதனல் அதிக லாபம் பெறுகிறீர்கள். இப்பத்திரிகை தமிழ்நாட்டில் மட்டும் ஆயிரம் குடும்பங்களில் படிக்கப் படுகிறது. விளம்பர ரேட்டுகளும் குறைவு. உடனே அணுகுங்கள்:

விளம்பர மானேஜர்,
'மசால் வடை' காரியாலயம்,
நாமக்கட்டித் தெரு,
சென்னை.



# ஸீஸன் டிக்கட்

ராமாநுஜன்

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலையில் எழுந்திருந்து குளித்துவிட்டு, தனுர் மாத பஜனைக்கெல்லாம் போய் வந்தாயிற்று. சரி இன்று எக்ஸிபிஷன் போகலாமா என்று உத்தேசம் பண்ணி இருந்தேன். குறைந்த பட்சம் போய்வர ரெயில் சார்ஜ், டிக்கட், டிபன் செலவு எல்லாமாக ஓர் ஐந்து ரூபாயாவது வேண்டும். என்னிடம் இருந்ததோ மூன்று ரூபாய்தான். யோசனை பண்ணினேன். கடைசியில் என் நண்பன் பாலசுப்பிரமணியனிடம் சீசன் டிக்கட் இருப்பது நினைவுக்கு வந்தது. அவனுக்குச் சென்னையில் உத்தியோகம். எனக்கும் அவனுக்கும் ஒரே வயது. இப்படி எண்ணிக் கொண்டிருக்கும் போதே வாசலில் அந்தப் பிரஸ்தாப நண்பன் வந்தான்.

''என்னப்பா பாலு, உன்னைத் தான் நினைத்துக்கொண்டிருந்தேன். 'எக்ஸிபிஷன்' போகலாம்னு இருக்கேன். உன்னுடைய தயவில்தான். ஒன்றுமில்லை; கொஞ்சம் சீசன் டிக்கட் தர முடியுமா?''

''சீசன் டிக்கட்டா, தர்றேன். அதைப்பற்றி ஒன்றுமில்லை. ஜாக்கிரதையாகப் போய்வர வேண்டும். மாட்டிக்கொண்டு தொலைக்கப் போகிறாய்.''

''அதெல்லாம் இவருக்குத் தெரியாதாடா! என்னமோ புதுசாச் சொல்லிக் கொடுக்கிறாயே'' என்று என்னைப்பற்றி வீறாப்புப் பேசிக் கொண்டேன். எனக்கே சந்தேகம்,

எங்கே தகராறு பண்ணப் போகிருனே என்று. நல்ல காலம்தான் சீசன் டிக்கட்டைக் கொடுத்தான்.

சீசன் டிக்கட்டைப் பெற்றுக் கொண்டு வாலிபாகள் பெருமையாகத் தங்கள் கை எழுத்தை பல தடவை போட்டுக்கொள்வார்களே, அது மாதிரி ஒரு நூறு தடவையாது சீசன் டிக்கட்டிலிருந்த பாலுவின் கை எழுத்தைப் போட்டுப் பார்த்துக்கொண்டேன். அப்புறம்தான் நன்ருக வந்தது கையெழுத்து. ஏனென்ருல் எக்கச்சக்கமாகப் போனுல் கையெழுத்துப் போடு என்ருல் போட்டுக் காட்ட வேண்டாமா?

கடலூர் பாசஞ்சர் பத்து மணிக்குச் செங்கல்பட்டு வந்தது. ஜம்மென்று ஒரு மூன்ரும் வகுப்புப் பெட்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டேன். கார்டு (Guard) விசில் ஊத ரெயில் கிளம்பியது.

வண்டியில் ஒரு முதியவர், இன்னொருவரைப் பார்த்து, "பாருங்கள்! இந்த ரெயில் வண்டியில் வர வர டிக்கட்டில்லாமல் பிரயாணம் செய்வது. சீசன் டிக்கட்டை 'கோல்மால்' பண்ணுவது,—இதெல்லாம் பெருகிப் போச்சு சார்!" என்ருர்.

"எப்படியோ! டிக்கட் எக்ஸாமினர்களையும்ஞ ஏய்ச்சுப்பிட்டு வந்துடருன்கள்" என்ருர் இன்னொருவர்.

"ம்ம்ம்..அவனெல்லாம் என்ன சார் உண்மையாகவா உழைக்கிருன்கள்? என்னமோ, கடனேன்னு ஏறுவாங்க. பார்ப்பாங்க. ஏமாந்தவன் எவனுவது இருந்தா அவனைப் புடிச்சுக்குவாங்க" என்ருர் மூன்ருமவர்.

வண்டி தாம்பரம் வந்தது. 'அப்பாடா! இனிப் பயமே இல்லை! எழும்பூர் வரையிலும் நிச்சிந்தையாகப் போகலாம். எந்த எக்ஸாமினரும் வண்டியில் ஏறமாட்டான்' என்று அந்த இதழ் "கண்ணன்" பத்திரிகையை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன்.

"ஏ மிஸ்டர் டிக்கட் எங்கே?" என்ற குரல் கேட்டுத் திரும்பி



பாலு: அப்பா சாக்லெட் கொண்டுவந்தபோது உன்னையே தான் நினைச்சுண்டு தின்னேன்!

கீதா: அவ்வளவு பிரயமா எம்மேலே?

பாலு: அதுக்கு இல்லே; நீ பாதிப் பங்குக்கு வந்துடப் போறியோன்னுதான் நினைச்சேன்!

---

னேன். அட! டிக்கெட் எக்ஸாமினர்தான் அருகில் நின்றிருந்தார். தூக்கிவாரிப் போட்டது எனக்கு. போயும் போயும் என்னிடம்தானு முதல் முதலில் வரவேண்டும். ஒரு கால் விஷயம் அவனுக்குத் தெரியுமோ! இருந்தாலும் சமாளித்துக் கொண்டு பதில் சொன்னேன்.

"சீசன் டிக்கட், சார்."

"எங்கே எடு."

கையில் கொடுத்தேன். வாங்கிப் பார்த்தான் எக்ஸாமினர்.

"ஓம் பேர் என்னப்பா?"

"பாலசுப்பிரமணியன் சார்"

"வயது."

"பத்தொன்பது."

"எங்கே, கையெழுத்துப் போடு."




''அதான் சாதகம் பண்ணி விட்டு வந்திருந்தேனே. கை யெழுத்துப் போட்டப்புறம்தான் சந்தேகம் நிவர்த்தியாகி, சீஸன் டிக் கட்டைக் கையில் கொடுத்தான்.

அப்பாடா! சனியன் விட்டது! மறுபடியும் ''கண்ணன்'' படிக்கத் தொடங்கினேன்.

மறுபடியும் சற்று நேரத்திற் கெல்லாம் ஏதோ யோசித்தவராக வந்தார் அந்த எக்ஸாமினர்.

''ஏம்பா தம்பி, உன் பேர் என்ன சொன்னே?''

''பாலசுப்பிரமணியன் சார்!''

''உங்கப்பா பேர்?''

இதேதடா வம்பு! ''சங்கர ஐயர் சார்.''

''அப்போ நீ சைவமா?''

''ஆமாம் சார்.''

டிக்கட்பரிசோதகர் இதைக் கேட் டுச் சிரித்தார். பிறகு, ''ஏன் தம்பி, எல்லாம் தயார் பண்ணிக்கொண்டு வந்தாயே, கடைசியில் ஒன்றுமட் டும் மறந்துவிட்டாயே!'' என்றார்.

''என்ன சார், நீங்கள் சொல்லு வது எனக்கு ஒன்றும் புரியல் லியே!''

''புரியல்லியா! கொஞ்சம் உன் நாமத்தைக் கலைத்து விபூதி பூசிக் கொண்டு வந்திருக்க வேண்டாமா நீ? ஐயோ பாவம். சரி சரி, சீசன் டிக்கட்டை எடு. ஏது ஆள் பெரிய ஆள்தான்!''

அப்போதே என் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. அடப் பாவமே, இப்போதுதான் என் நினைவுக்கு வந்தது அது. காலையில் பஜனைக்கு நாமம் போட்டுக்கொண்டு போன வன் அதைக் கலைக்கவே இல்லை என்று. என் கதி இனிமேல் சொல்லியா தெரிய வேண்டும்? வண்டியில் என்னடாவென்றால், ''டிக்கட் எக்ஸாமினரையும் ஏய்ச்சுப்புட்டு வந்துடறான்கள்'' ''அவனெல்லாம் என்ன சார்..'' என்றெல்லாம் பேசினார்கள். டிக்கட் எக்ஸாமினரா அப்படிப்பட்டவன்! அவன் நமக்கு மேலே இருக்கிறான், பாருங்கள் ஐயா?'' என்று கூறுவது போலிருந்தது அவர்கள்மேல் விழுந்த என் பார்வை.

---

## பொழுதுபோக்கு விடை:

1. ஒட்டகம்; 2. சந்திர மண்டலம்.

என். எஸ். பத்மநாபன், பி. எ., பி. டி.




அன்று ஞாயிற்றுக்கிழமை. மாலைநேரம். அந்த வீட்டுப் பையன் ராமு தன் சகாக்களுடன் விளையாட வெளியே சென்றிருந்தான். அவன் மேஜை டிராயர் திறக்கப்படாமலே கிடந்தது. மேஜைக்குள் இருந்த ஆங்கில அகராதி, அட்லாஸ் புத்தகம், கணித உபகரணப் பெட்டி இவைகளிடையே ஒரே கொம்மாளம், கொண்டாட்டம். ஒன்றை மற்றொன்று மலர்ந்த முகத்துடன் பார்த்துக்கொண்டது.

''என்ன பள்ளியின் பெரிய விடுமுறை ஆரம்பமாகிவிட்டதா என்ன?'' என்ற கேள்வியுடன் அகராதி அரங்கைத் துவக்கியது.

''இல்லை, இல்லை. நேற்றைக்குத்தான் நான் கணக்கு வகுப்பில் சாய்வு மேஜையின் மேலிருந்து கேட்டேனே. அடுத்த வாரம் பரீட்சை; அதற்குப் பின்தான் லீவு விடுவார்களாம். ஆமாம், உனக்கு இந்தச் சந்தேகம் ஏன் ஏற்பட்டது?'' என்று ஆச்சரியத்துடன் வினவியது ஜாமெட்ரி பாக்ஸ்.

''அப்படியா, அகராதியை ராமு தொட்டுப் பல நாட்கள் ஆகிவிட்டன போல் இருக்கிறது. அதனால்தான் ஒருவேளை—'' என்று கேலியுடன் குறுக்கிட்டது அட்லாஸ்.

அகராதிக்கு உடனே ரோசம் பொத்துக்கொண்டு வந்தது. ''ஏன், உன்னைக்கூடத்தான் திரும்பிப் பார்க்கவில்லை, சில நாட்களாக'' என்று மறுமொழி அளித்தது.

''நாம் மட்டும் என்ன செய்துவிடமுடியும்? அவனுக்கு உதவி புரியவே நாம் இருக்கிறோம் என்பதை உணர மறுக்கிறான் அவன். நம் பிறவிப் பயன் அதை அவன் உணர்வதுதான்'' என்று வேதாந்தம் பேசியது உபகரணப் பெட்டி.

''அப்போதுதான் நம் சோம்பேறித்தனமும்கூட குறையும். இதற்குரிய யோசனைகளைத்தான் நாம் ஆராயவேண்டும். அவனிடம் முறையிட்டுக் கொள்வது நல்லதா? அல்லது அவன் ஆசிரியர் மூலமாகச் செய்யமுடியுமா? என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை'' என்று பிரச்னையைக் குழப்பிவிட்டதுடன் அட்லாஸ் திருப்தியடைந்தது.




''நாம் நம்மால் ஆகத்திறனில்லாத, ஆகாத காரியத்திற்கன்றோ முறையிடுதல் முறை! ஒவ்வொருவரும் தனித்தனியே அவன் கவனத்தை ஈர்த்தலாலேயே வெற்றி பெறமுடியும் என்று நான் கருதுகிறேன்'' என்று அகராதி அறுதியிட்டுக் கூறவும்தான் மற்றவைகள் யோசிக்கத் தொடங்கின.

உபகரணப் பெட்டிதான் முதலில் பேச ஆரம்பித்தது. அதன் ஆர்வத்தில் ஒரு குட்டிப் பிரசங்கமே நிகழ்த்திவிட்டது. ''முந்தாநாள் ஆசிரியர் வகுப்பில் ஒரு ஜாமெட்ரி கணக்குப் போட்டார். புதிய பாடமாம். ஏதோ இணைகரம் என்றோ என்னவோ சொன்னதாக ஞாபகம். அன்றைக்கு வகுப்பில் உடனேயே கணக்கு ஒன்றைப் போடச் சொன்னார். உடனே நான் சுறுசுறுப்படைந்தேன். ராமு சரியான உருவம் வரைய என்னுலான பணியை விரையச் செய்தேன். ஆசிரியரிடம் கணக்கைக் காட்டி, 'சபாஷ்' பட்டம்கூட வாங்கிவிட்டேன். அதே பயிற்சியில் இரு கணக்குகளை வீட்டு வேலையாக வைத்துக்கொள்ளச் சொன்னார் ஆசிரியர். அவைகளை நாளைத்தினம் காட்டியாக வேண்டும். இன்று இந்நேரம்வரை அவற்றை வரையவில்லை. இத்தனைக்கும் இன்றுகாலை டிராயரைத் திறந்தபோது நான் கைவிரல்களில் இடறிப் பார்த்தேன், அவன் என் நினைவு பெறுவான் என்ற நோக்கத்துடன். அவன் என்னடாவெனில் ஏதோ நூல் நிலையக் கதைப்புத்தகத்தை எடுத்துக்கொண்டு என்னை ஒதுக்கி விட்டுப் புறப்பட்டான். அப்போதுதான் அவன் எண்ணம் தெரிந்தது. நான் என்ன ஒரு தூண்டுகோலாகத் தானே இருக்கமுடியும்? மற்றொரு நாளும் அப்படித்தான். ஜாமெட்ரி வகுப்பு உள்ள நாள் ஆகையால் வெளியே போகலாம் என்ற நினைவுடன் உற்சாகமாக இருந்தேன். சோம்பேறித்தனத்தின் காரணமாய் என்னை இங்கேயே விட்டுச் சென்றுவிட்டான். எனக்கோ நல்ல ஏமாற்றம், வருத்தம்'' என்று சொல்லித் தயங்கியது. சிறிதுநேர ஆசுவாசத்திற்குப்பின் அதுமேலும், ''நான் அவனுக்குக் கூற விரும்புவது இதுதான். பள்ளிக்கூடத்திற்கும் என்னைத் தவறாமல் அழைத்துக் கொண்டுபோய், வீட்டிலும் சுதந்தரத்துடன் என் துணை கோரினால் பரீட்சைக்குமுன் இரவு 11,12 மணிவரை அவனும் கஷ்டப்பட வேண்டியதில்லை. என்னையும் தொந்தரவு செய்ய வேண்டியதில்லை'' என்று கூறி முடித்தது.

''உன் கதை தீர்ந்ததா? நான் கூறும் அநுபவத்தைச் சிறிது கேளுங்கள்'' என்ற முன்னுரையுடன் அட்லாஸ் ஆரம்பித்தது.

''முக்கியபாடம் ஒன்றின் துணைவனை நீயே அவலமுறும் போது என்னைப்பற்றி என் சொல்வேன்! நேற்று நான் இந்த மேஜைக்குள்ளே இருந்தபோது ஒரு விஷயம் காதில் விழுந்தது. வெளியே மேஜைக்குப் பக்கத்தில் ராமுவின் தகப்பனார் இருந்தது சாவித் துவாரத்தின் மூலம் தெரிந்தது. மற்றொருவர் அவருடைய அலுவலக நண்பர் போலிருக்கிறது. ராமுவின் தகப்பனார் நண்பரைப் பார்த்து, 'இன்றைக்குப் பார்த்தீர்களா ஸார், நம்ம ஆபீஸில் குமாஸ்தா வேலைக்கு இன்டர்வியூ நடந்தது. அதில் ஒரு பையன் மெட்ரிகுலேஷன் படித்திருக்கிறான். அதிகாரி இந்தியாவின்

எல்லேயிலுள்ள தேசங்கள் யாவை என்று கேட்டபோது சரியான முழுவிடை தரமுடியாமல் திண்டாடினுன். பாகிஸ்தானேத் தவிர மற்றவை பல மைல்களுக்கப்பால் உள்ளவை' எனச் சொல்லிச் சிரித்தார். நண்பரும் சிரித்துக் கொண்டே, 'என்ன செய்வது. மாணவர்களிடையே அட்லாஸ் பார்த்துப் படிக்கும் பழக்கம் கெட்டுவிட்டது. பெரிய பெரிய பரீட்சைகளிலெல்லாம் இம்மாதிரி தான் மாணவர்கள் நகைக்கப்படுகிருர்கள்' என்று மொழிந்ததைக் கேட்டதும் என் உள்ளம் பாகாய் உருகியது. ராமு மாத்திரம்தான் என்ன? என்னேத் திரும்பிக்கூட-இல்லே, திருப்பிக்கூடப்பார்க்காமல் இருந்ததன் விளேவே காலாண்டுத் தேர்வில் தேசப்படத்தில் இடங்களேக் குறிக்கத் திண்டாடும்படி ஆயிற்று. எனக்கும் அருகிலுள்ள இந்த பேப்பர் சொல்லித்தான் தெரியும். என்னவோ, நம் ராமுவும் இந்தத் தவருன வழிகளில் போய் அவமானப்படக் கூடாதே என்பது தான் என் கவலே'' என்று விசாரத்துடன் நிறுத்தியது.

அகராதிக்கு எப்போதும் சிறிது கர்வம் உண்டு. தன்னேத்தான் தினசரி இரவு ராமு பயன் படுத்துகிருன், தன் துணேநலம் மறந்த




தில்லே என்ற காரணம். ஆயினும் மற்றவர் இருவரும் கூறிய வாற்ருன் அதன் மாட்டும் கவலே பற்றிக் கொண்டது. அது முடிவுரையாகக் கூறலாயிற்று: ''நீங்கள் இருவரும் கூறியவற்றைக் கேட்கும் பொறுமைகூட எனக்கில்லேயாயினும் உங்கள் ஆசையைக் கெடுப்பானேன் என்று பேசாமலிருந்து விட்டேன். மேலும் என் கதையே வேறு. என்னே மட்டும் அணுகுவதால் முழுப்பயன் அடைய முடியாது. பலரிடமும் பேசிப்பழகி அதன் காரணமாக என் துணே நாடும்போது மட்டும் என் சிறந்த பணி உதவும். தவிரவும்..'' என்று தொடங்கவும் மேஜை டிராயரின் சாவித் துவாரத்தில் சாவி பொருத்தப்படும் சத்தம் கேட்டது. உடனே டிராயருக்குள் பூரண அமைதி நிலவியது.

வேறு யாருமில்லே. ராமுதான் தன் நண்பனுடன் வந்து பாட புத்தகங்களுடன் அகராதி, அட்லாஸ், ஜாமெட்ரி பாக்ஸ் மூன்றையும் எடுத்து மேஜைமேல் வைத்துக்கொண்டே, ''என்ன சுந்தர், வீட்டுக் கணக்கு, வீட்டு வேலே முதலியவற்றைப் பார்ப்போமா? அடுத்த வாரம் பரீட்சை ஆயிற்றே'' என்ருன்.

மீண்டுமொரு முறை மூன்று உபகபகரணங்களின் முகத்திலும் புன்முறுவல் தோன்றியது. அதையெல்லாம் கவனிக்க ராமுவுக்குப் பொழுது எங்கே?

---



''டேய்! உனக்கு மூளே இருக்காடா?''

''ஏண்டா? உனக்கு அவஸ்யம், தேவைப் படுதா?''

# பொழுது போக்கு

'ரகமி'



துண்டு படங்களை வெட்டி, சரியாகச் சேர்த்து ஒட்டுங்கள்..




விடையில் எண்களுக்குச் சமமான எழுத்துக்களைப் பொருத்திப் பார்!

விடை: 22-ஆம் பக்கம் பார்க்க

# நீங்களும் நானும்

ஆர்வி

**ரா. ஜயலக்ஷ்மி, மேட்டூர்**

கே: என் பெயர் ஜயலக்ஷ்மி. வயது 13. உயரம் 5 அடி. மிகவும் ஞாபக மறதி அதிகமாயுள்ளது. அதைப் போக்க என்ன வழி?

ப: உன் பெயர், வயது, உயரம் இந்த மூன்றையும் மறந்திருப்பதே சரியான வழி என்று எனக்குத் தோன்றுகிறது. இந்த மூன்றையும் மட்டும் எப்படி மறக்காமல் இருக்கிருய்? அதே போலத்தான் மற்றவற்றையும் உன்னுல் மறக்காமல் இருக்கமுடியும்.

**வாஞ்சிநாதன், மாம்பலம்**

கே: விஞ்ஞான ஆசிரியரைக் கேட்டேன், ஈதர் என்ருல் என்ன என்று. அவர் சரியாக விளக்கவில்லை. உங்களால் விளக்க முடியுமா?

ப: முடியும். ஈதர் என்ருல் என்ன என்று இன்னும் விஞ்ஞானிகளாலேயே கூற முடியவில்லை. ஆனல் ஒலி, ஒளி இவற்றைத் தாங்கி வருவதுதான் ஈதர் என்பது எல்லாருக்கும் தெரியும். ஒலி அலைகள் ஈதர் வழியாகவே நம் காதுக்கு எட்டுகின்றன. ஒளியும் அப்படித்தான். கண்ணுக்கும் புலனுக்கும் தெரியாத ஒன்று பூமண்டலம் எங்கும் பரவி நிற்கிறது. அதுவே ஈதர். கடலில் தண்ணீர் இருக்கிறது. அந்தத் தண்ணீரில் அலைகள் உண்டாகின்றன. அதேபோல் பூமி மண்டலமும் எல்லையற்ற ஒரு கடல்தான். தண்ணீருக்குப் பதில் ஈதர் என்னும் வஸ்துவால் நிறைந்தது அது. அந்த ஈதருக்கும் அலைகள் உண்டு. அந்த அலைகள்தான் ஒலி அதிர்ச்சிகளையும் நமக்குச் சுமந்து வருகின்றன.

**எஸ். அலமேலு, ஆதித்தேச்சுரம்**

கே: புண்ணியம் செய்தவர்கள் தான் பணக்காரர்களாகப் பிறக்கிருர்கள் என்பது நம் நம்பிக்கையா?

ப: இல்லை; புண்ணியம் செய்தவர்கள் பரிசுத்தமானவர்கள் வீட்டில் பிறக்கிருர்கள். அது பணக்காரர் வீடாகவும் இருக்கலாம். ஏழைகள் வீடாகவும் இருக்கலாம். கீதையே இதைக் கூறுகிறது.

**ந. சந்திரநாதன், கொழும்பு-12**

கே: இலக்கணம் தெரியாமல் மொழிகளைக் கற்க முடியாதா? இலக்கணம் இல்லாமல் மொழி நிலைத்து இருக்காதா?

ப: பள்ளிக்கூடத்தையே எட்டிப் பார்க்காத கந்தனும் சுப்பனும் எந்த இலக்கணத்தைப் படித்துவிட்டு ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிருர்கள்? மொழியைக் கற்க இலக்கணமே தேவையில்லை. அம்மா தன் குழந்தைக்கு இலக்கணமா சொல்லித் தருகிருள்? நன்ருகப் பயிற்சி பெறவே இலக்கணம்.

**டி. பி. வடிவேலன், தஞ்சாவூர்**

கே: எங்கள் கேள்விகளுக்கு விடை தரும் முன்பாக நீங்கள் நூல்களைப் பார்த்துக் கொள்வதுண்டா?

ப: உண்டு: தெரியாதவற்றைத் தெரிந்து கொள்வேன். தெரிந்தவற்றையும் சரி பார்த்துக்கொள்வேன். இந்தப் பகுதியினுல் உங்களைவிட அதிக லாபம் எனக்குத்தான்.

**சு. மா. பாலகிருட்டினன், திருச்சி**

கே: திராவிடர்கள் என்ருல் யார்? திராவிட இனம் என்பது எது?

ப: இந்தியாவில் தென் பகுதியில் வசிப்பவர்கள் என்று பொருள். திராவிடர் என்ற ஓர் இனம் இப்பொழுது தனியாக இல்லை. பாடப் புத்தகம் எழுதும் சில சரித்திராசிரியர்கள் காலப் போக்கை அநுசரித்துப் புகழையும்

பொருளையும் எளிதில் சம்பாதிக்க வேண்டி, தவருன கருத்துக்களைக் கற்பித்து எழுதுகிருர்கள். 'இது நம்தமிழ் நாட்டின் தீவினையன்ருே?'

**எஸ். வி. சந்திரசேகரன், சேலம்**

**கே:** தமிழ் சினிமாவின் பெயர்களை எல்லாம் நாடோடிப் பழமொழிகளாகவும், கொச்சை மொழிகளாகவும் வைக்கிருர்களே, ஏன்?

**ப:** அவர்கள் தமிழ்ப் பெருமக்களைத் தங்களைப்போல் எண்ணிக் கொண்டிருக்கிருர்கள். ஆனல் படம் பார்ப்பவர்களைவிட படம் எடுப்பவர்களே இன்று பெரும்பாலும் பாமரர்களாக இருக்கிருர்கள் என்பது தெரிந்த கதைதானே?

**நவநீதன், நாகப்பட்டினம்**

**கே:** தமிழ்ப் படக் கதைகள் எல்லாம் பிற மொழிகளிலிருந்து காப்பியடித்த கதைகளா?

**ப:** காப்பியடித்தது என்று நான் சொல்லமாட்டேன். அப்படிக் காப்பியடித்தாலாவது சில நல்ல கதைகள் உண்மைக்கும் நடைமுறைக்கும் ஏற்றதாக இருக்குமே. கலைப் பண்புக்கும் பகுத்தறிவுக்கும் பொருத்தமானதாக இருக்குமே. இப்போது வரும் பெரும்பாலான தமிழ்ப்படக் கதைகள் ஒட்டுப்போட்ட பெருமாள் மாட்டுக்காரன் துணிகள். தமிழ் நாட்டில் நடைமுறையில் வழங்கும் சில கொச்சைப் பேச்சுக்களைத் தவிர மற்ற அம்சங்கள் எல்லாம் இடம் தெரியாமல் பிச்சையெடுத்த அறுதல் துணிகள். ஆங்கிலப் படங்களிலிருந்து சில ஷாட்டுகள்; ஹிந்திப் படங்களிலிருந்து எந்தக் காலத்திலும் யாரும் அணியாத ஆபாசமான ஆடை அலங்காரங்கள், கோணங்கிச் சேஷ்டைகள், புராணக் கதைகளில் கொஞ்சம், சரித்திரப் பெயர்களில் கொஞ்சம், வங்காளி மராத்திக் கதைகளிலிருந்து அங்கும் இங்கும் பிய்த்த பகுதிகள் கொஞ்சம், தமிழ் எழுத்தாளர்கள் கதைகளிலிருந்து களவாடிய கருத்துக்களும் பகுதிகளும் கொஞ்சம் - உழைப்பாளி தொழிலாளி அல்லது தமிழ் நாடு, தமிழ்ப் பண்பு என்று கூறிக்கொண்டு ஒரு பொட்டுக்கூடையும் முறமும், உழு கலப்பையும் மண் வெட்டியும் சுமந்த நிலையில் அரைகுறை மார்க்ஸியம் பேசும் பிதற்றல் வசனங்கள், இவையனைத்தும் இன்னமும் சில கலந்து காசு பறிக்கும் தகிடுதத்த வித்தையாக உருவாக்கப்படுவதே தமிழ்ப் படக் கதைகள். இந்த மாதிரிப் படக் கதைகளால் நல்ல இலக்கியம் வளராது; நல்ல மக்களும் உருவாக மாட்டார்கள்.

**எஸ். ராஜராமன், பெங்களூர் ஸிடி**

**கே:** மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்ளலாம் என்று சிலர் கூறுகிருர்களே!

**ப:** கூடாது: கூடாது. குழந்தைகள் சண்டையில் பெரியவர்கள் தலையிடுவதும், பெரியவர்கள் சண்டையில் மாணவர்கள் தலையிடுவதும் கூடவே கூடாது. நமது நாட்டில் அதுவும் இப்போது அரசியல் நடைபெறவில்லை. ஆட்சியின் பெயரால் சில பித்தலாட்டங்களும் கட்சி அரசியல் என்ற பெயரால் சில காலித்தனங்களுமே நடைபெறுகின்றன.

**இரா. கோவிந்தராசன், திருப்பத்தூர்**

**கே:** கண்ணன் 'நீங்களும் நானும்' என்ற பகுதியில் நகைச்சுவைக் கேள்விகளுக்கு அதிக இடம் தருவீர்களா?

**ப:** வாழைப்பழத் தோலில் வழுக்கி விழுந்தவனைப் பார்த்து நகைக்கும் நகைச் சுவைக்கா? நகைச் சுவை பிறருடைய குறைகளைக் கண்டு பரிகசிப்பதில் பிறப்பதல்ல. பிறர் தம்மிடம் உள்ள குறைகளைக்கூட உணர்ந்து திருத்திக்கொள்ளச் செய்வதுதான் நல்ல நகைச்சுவை. இது பூவைப்போல் மென்மையானது; முகருபவர்களுக்கெல்லாம் மணம் தருவது.

**எம். பராங்குசம், கோலார்**

**கே:** மனிதனுக்குச் சிறப்புத் தருவது எது?

**ப:** சிறந்தவற்றைச் சிறப்பாகப் பேசத் தெரிந்த நாக்கு.



# பேய் காத்த பேழை!

## கடமை முடிந்தது

அந்த அமைதியான இரவில், அந்தப் பாழடைந்த பங்களாவில், அந்தச் சிரிப்பொலி கூடப் பயங்கரமாகத்தான் எதிரொலித்தது. அந்தப் பயங்கரத்தை அதிகப்படுத்துவது போல ஒரு மெல்லிய பெருமூச்சு ஒலியும் கேட்டதுபோலத் தோன்றியது குமரேசனுக்கு. சற்றே தயக்கத்துடன் திரும்பிப் பார்த்தான். ஒரு கணம் அவன் இருதயம் நின்றே விட்டது! ஆமாம், சந்தேகமே இல்லை. அவர்கள் சற்றுமுன் இருந்த அந்தக் குகைப் பகுதியிலே ஒரு கரிய உருவம் ஒரு கண நேரம் தோன்றிப் பின் மறைந்தது. குமரேசனின் உடல் லேசாக நடுங்கிற்று. ஆனால் போலிக் கௌரவம், முருகு, அழகு இவர்கள் முன், மீண்டும் ஒரு முறை அவன் பயத்தைக் காட்டிக் கொள்ள அவனை விடவில்லை. விரைவில் அந்த இடத்தை விட்டுப் போய்விடத் துடித்தது அவன் மனம். வார்டனும் அதைப் புரிந்து கொண்டதுபோலப் பேழையை மூடிப் பத்திரப் படுத்திக்கொண்டு புறப்பட்டார்.

சந்திரனின் வெள்ளிக் கிரணங்கள் எங்கும் வெள்ளி முலாம் பூசிக் கொண்டிருந்தன. சற்றே வலுத்து வீசிய காற்றில் சவுக்கு மரங்கள் அசைந்து ஓவென்று ஊளையிட்டன. அதனோடு ஒட்டினாற்போல வந்தது ஒரு நாயின் ஓலம். ‘அம்மே’ என்று ஓர் ஆட்டுக்குட்டியின் தீனமான குரல் கேட்டு எதிரொலித்தது.

இப்படியாக, விடுதி வந்து சேரு மட்டும் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் குமரேசன் மனத்தில் ஓர் அசாதாரணமான உணர்ச்சியையே உண்டாக்கிக் கொண்டிருந்தது.

அலைந்து விட்டு வந்த களைப்பில், அறைக்கு வந்ததுமே அழகும், முருகும் படுத்து நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து விட்டார்கள். குமரு மட்டும் தூக்கம்



வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். திடீரென்று மீண்டும் அந்த நாய் குரைக்கும் ஒலி! இப்போது சமீபத்தில் கேட்டது. குமரு துள்ளிக் குதித்தான். துணிந்து ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். நிலவொளியிலே சோலையின் ஒரு மூலையில் நின்றுகொண்டு கறுப்பு நாய் ஒன்று வார்டன் அறையின் ஜன்னலை நோக்கிக் குலைத்தது, தெரிந்தது. ஜன்னல் கம்பிகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு உற்றுக்கவனித்தான் குமரு. சற்றுப் பொறுத்து ஒரு கறுத்த உருவம் ஜன்னலுக்கு வெளியே வந்தது. ஒரு விநாடிதான் குமரேசனுல் அதைச் சரியாகப் பார்க்க முடிந்தது. அடுத்த விநாடியே மரங்க ளடர்ந்து இருண்டிருந்த பகுதியில் அது மறைந்து விட்டது.

மறுநாள் அதிகாலை. இன்னும் விடுதியில் முதல் மணி அடிக்கப் படவில்லை. யாரோ லேசாகக் கதவைத் தட்டும் ஓசை கேட்டு எழுந்தான் குமரு. அவனுக்கு முன்பே எழுந்த முருகு, ''யாரது?'' என்று குரல் கொடுத்தான். ''நான் தான்'' என்று வார்டனின் குரல் மெல்லியதாக ஒலித்தது. துள்ளிச் சென்று கதவைத் திறந்தான் அழகு. வார்டன் உள்ளே வந்து கதவையும் சாற்றித் தாளிட்டார். பிறகு மூலையிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார். வார்டனின் அந்தச் செய்கை மூவருக்குமே அதிசயமாயிருந்தது. அவர் செயலைப்போல அவர் முக பாவமும் மாறித்தான் இருந்தது. வழக்கமாக அதில் ஒளிரும் கம்பீரத்திற்கும் பின்னல் கலக்கத்தின் குறிகளும் மறைந்து நின்றன. மெதுவான குரலிலேயே அவர் பேச ஆரம்பித்தார். ''நேற்றிரவு நீங்கள் மூவரும் எங்காவது போயிருந்தீர்களா?'' அவரது கேள்வி



மூவருக்குமே வியப்பையும் அச்சத்தையும் தந்தது. ''ஸார், நாங்கள் செய்தது தவறுதான். ஆனால் எல்லாவற்றையும்தான் நீங்கள் அறிவீர்களே? இன்றும்....'' குமரேசன் வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்தினான். வார்டன் நெற்றியைச் சுளித்துக்கொண்டு, ''சரி, வீண் பேச்சு வேண்டாம், நடந்ததை அப்படியே சொல்லுங்கள்'' என்றார். அவர்கள் சொன்னதைக் கேட்டு முடித்ததும், அவர் முகத்திலிருந்த கவலைக் குறிகள் அதிகப்பட்டது போலிருந்தன. முடிவாக, ''நான் சொல்லும்வரை இந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் யாரும், யாரிடமும் மூச்சுக்கூட விடக்கூடாது. காலைப் பிரார்த்தனை முடிந்ததும் என் அறைக்கு மூவரும் வரவேண்டும்'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டு நகர்ந்தார் வார்டன்.

அதேபோல் அவர் அவர்களுக்காகத் தயாராகக் காத்துக்கொண்டிருந்தார். என்றுமில்லாதபடி உட்காரச் சொல்லிவிட்டுக் கதவையும் சாத்திவிட்டுப் பேச ஆரம்பித்தார்: ''நேற்றிரவு நடந்தவையெல்லாம் உங்களுக்கு நன்றாக நினைவிருக்கிறதல்லவா? நீங்கள் அந்தக் குட்டைச் சுவரில் ஏற, அது இடிந்து, அதிலிருந்து ஒரு பேழையை நாம் கண்டு எடுத்தோம் அல்லவா? அந்தப் பேழையை நான் பத்திரமாக எடுத்துக்கொண்டு வந்தேன். வழியில் எங்கும் தவறவிட்டு விடவில்லையே?''

''இல்லை, ஸார், எங்களை அறையில் விட்டுவிட்டு நீங்கள் போனபோதுகூட அது உங்கள் கையில் இருந்தது'' என்றான் முருகு. ''ஆமாம், ஆமாம், நான்கூடப் பார்த்தேன்'' என்றான் அழகு. குமரேசன் மட்டும் மௌனமாக இருந்தான். வார்டன் தொடர்ந்தார். ''அந்தப் பேழையை இந்த அறைக்குக் கொண்டுவந்து இந்த அலமாரியிலேதான் வைத்தேன். அதிலே எனக்குச் சந்தேகமே இல்லை. அதற்குப் பிறகு நான் கதவைத் திறக்கவே இல்லை. உள்ளே வேறு ஒருவரும் வர வழியில்லை. ஆனால் இன்று அதிகாலையில் நான் அதைத் தேடியபோது, அது வைத்த இடத்திலே இல்லை! எங்கோ மறைந்துவிட்டது. எப்படி மறைந்திருக்க முடியும்? எனக்கு இது மர்மமாகவே இருக்கிறது. எப்படி இருந்தாலும் அதைத் தேடிக் கண்டுபிடிப்பதும் அதுவரை இதை வெளியிடாமல் வைத்திருப்பதும் நம் கடமை. இதில் நீங்கள் என்னுடன் பூரணமாக ஒத்துழைக்கவேண்டும்.''

அழகேசனும் முருகேசனும் பதில்கூடப் பேச முடியாமல் சிலை போல உட்கார்ந்திருந்தார்கள்.



குமரேசன் மட்டும் ஏதோ தீவிர மான யோசனையில் இருப்பது போலக் காணப்பட்டான்.

''ஸார், நீங்கள் கதவைச் சாத்தியிருந்ததென்னவோ சரி, ஆனால் ஜன்னல் கதவுகளைச் சாத்தி இருந்தீர்களா? தவிரவும் அலமாரி மூட்டப்பட்டிருந்ததா என்றும் தெரிய வேண்டும்'' என்றான். ''பலே, பலே, குமரு! பிரமாதம், கற்பனை! ஆனால் எந்த மனிதனும் அந்த ஜன்னல் வழியாக உள்ளே புகுந்து விடமுடியாது. அதனால் அலமாரி திறந்திருந்ததில் அதிகக் குற்றமில்லை. எதற்கும் இதைப் பற்றி யோசித்து முடிந்தவரையில் துப்புத் துலக்குங்கள். ஜாக்கிரதை!'' என்றார் வார்டன்.

அன்று முழுவதும் அழகேசனுக்கும் முருகேசனுக்கும் மனம் வேறு எதிலும் செல்லவே இல்லை. குமரேசனோவென்றால், காலையிலிருந்து ஏதோ திட்டம் போட்டு வேலை செய்கிறவனைப்போல் ஏதேதோ செய்து கொண்டிருந்தான். அழகு, முருகு. இருவருக்குமே அவன் என்ன செய்யப் போகிறான் என்று தெரிந்து கொள்ளும் ஆவல் வேறு பிடரியைப் பிடித்து உந்திற்று. இந்த உத்தேசத்துடன்தான் அன்று மாலை ஆற்றங்கரைப் பக்கம் நடந்தார்கள்.

மாலை வெயிலிலே நீண்டு வளர்ந்திருந்த சவுக்கை மரங்களின் நிழல் வெகுதூரம் பரவிக் கிடந்தது. தூரத்திலிருந்த மலை உச்சியிலிருந்து கீழே இறங்க மனமில்லாமல் தயங்கிக்கொண்டிருந்தான் சூரியன். அவனுடைய கிரணங்கள் அந்தப் பண்டார மண்டபத்தின் இடிபாடுகளை விளக்கிக்கொண் டிருந்தன. சில இடையர்கள் ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டு, அந்த மலைச்சாரல் வழியாக வந்துகொண் டிருந்தனர். சற்றுத் தூரத்தில் ஒரு சிறுவன் மட்டும் நின்று யாருடனோ பேசிக் கொண்டிருந்தான். ''அந்த ஆளைப் பார்த்தால் குமருபோலில்லை?'' என்றான் அழகு. ''எனக்குக் கூட அப்படித்தான் படுகிறது, வா; போய்த்தான் பார்ப்போமே'' என்று சொல்லிக்கொண்டே முருகேசன் நடந்தான்.

அருகில் சென்றதும் அவர்கள் பேசுவது தெளிவாகக் கேட்டது. அந்தச் சிறுவன்தான் பேசிக் கொண்டிருந்தான். ''நேத்துச் சாயரட்சை நான் திரும்பும்போதே நிலா மேலே வந்திடுச்சு. அவசரமா ஆடுங்களை ஓட்டிக்கிட்டுப் போயிட்டேன். ஊட்டிலேபோய்ப் பார்த்தா அந்தோ நிக்கிதுங்களே வெள்ளையன், அதைக் காணலிங்க. நானு பயந்துட்டேன்; எங்க சின்னயிக்குத் தெரிஞ்சா நெஞ்சிலே உப்பை வெச்சுச் சுட்டுப் புடுவாங்களே! ஆடுங்களே பட்டிலே அடைச்சுப்புட்டு ஆயிக்குத் தெரியாமே ஓடியாந்துட்டேனுங்கே. ராவு எங்கெங்கோ தேடி அலஞ்சுகிட்டிருந்தப்ப அதோ அந்தப் பண்டாரத்தார் மண்டபத்துப் பக்கமா குரல் கேட்டுச்சுங்க. பாதி ராவுக்குமேலே இருக்குங்க, மனசு அடிச்சுக்கிச்சு. எப்படியோ அங்கே போயிட்டேனுங்க. மண்டபத்தண்ட ஆடு நடுங்கிக்கிட்டு கிடந்ததுங்க அந்த வேளைக்குச் சரியா, அதோ அந்தப் பள்ளிக்கூடத்துப் பக்கம் இருந்து ஒரு கறுப்புப் பூதமுங்க! ''நேரா என்னைப் பார்த்து வந்துச்சுங்க. நான் பதுங்கிட்டேன். அது மண்டபத்திலே புகுந்து போயிடுச்சுங்க. கையிலே மட்டும் பெட்டிபோல இருந்துதுங்க. அப்பவே பாதி உசுரு பூடுச்சுங்க, சத்தியமா அது பேயே தானுங்க! அந்தப் பக்கம் போவாதீங்க'' பையன் சொன்ன விதத்திலிருந்து அவன் அதைப் பூரணமாக நம்பினான் என்பது தெரிந்தது.

குமரேசன் ஏதோ தணிந்த குரலில் பதில் சொல்லி, அந்தச் சிறுவனை அனுப்பிவிட்டு, நண்பர்களின் பக்கமாக வந்தான். ''என்னப்பா, குமரு, துப்புத் துலக்குகிறேன் என்று சொல்லிவிட்டு மாட்டுக்காரப் பையனோடு கதை பேசிக்கொண்டு நிற்கிறாயே? கதை எப்படி? ருசியாகவாவது இருந்ததா?'' என்று சிரித்தனர் இருவரும். குமரேசன் மட்டும் சிரிக்கவில்லை. ''எல்லாம் நான் நினைத்த




படிதான் நடக்கிறது. என் எண்ணம், நம்பிக்கை எல்லாமே ஆட்டம் கொடுத்து விடும்போல இருக்கிறது. எதுவும் முடிவு கட்டுவதற்கு முன்னால் இன்னும் ஒரு விஷயத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காக இப்பொழுதே அந்த மண்டபம் வரை போய்வர வேண்டும். நீங்களும் வருவீர்களில்லையா?'' என்றான் குமரேசன். அரை மனத்துடன் சம்மதித்து நடந்தார்கள், மற்ற இருவரும்.

அவர்கள் மண்டபத்தை அடைந்தபோது செக்கச் செவேலென்று ரத்தத்தைப் பூசிக் கொண்டு நின்ற வானம், அதன் மீது இருள் போர்வையை இழுத்து மூட முயன்றுகொண் டிருந்தது. இருட்டும் வெளிச்சமும் ஒன்று கூடும் இனம் புரியாத நிலை; உள்ளே நுழையும் போதே, நெஞ்சிலே ஒரு படபடப்பு. வெளியே இருந்ததை விட உள்ளே அதிக இருட்டாக இருந்தது. பின்னால் கிடந்த இடிபாடுகளுக்கிடையே அதிகம் சேதப்படாதிருந்தது, ஓர் அறை. சிறியதாகவும் சுற்றிலும் பல அறைகளால் சூழப்பட்டதாகவும் இருந்ததைப் பார்த்தால், அது ஒரு காலத்தில் பொக்கிஷ அறையாக இருந்திருக்கும் என்று எண்ணத் தோன்றிற்று. குமரேசன் உற்றுக் கவனித்தான்.

''அதோ, அ..அ..அதோ!'' குமரேசன் காட்டிய இடத்தைக் கவனித்தார்கள் இருவரும். அந்த மங்கலான வெளிச்சத்தில் மிக மங்கலாக அந்தப் பேழை இருப்பது புலப்பட்டது! சந்தேகமில்லாமல் அதே பேழைதான்! ''அ..அ..தேதான் குமரு!'' பயத்தில் குளறினான் முருகேசன். அழகேசன் ஆடித்தான் போய்விட்டான். குமரேசன் சிரித்தான். ''போடா பயங்காளிகளா! இதற்குத்தானா இவ்வளவு தூரம் வந்தோம்?''

''குமரு! வேண்டாம்! நீ சொன்னதைப் பார்த்தால் அந்தப் பிசாசுதான் அதை எடுத்து வந்திருக்க வேணும். அதோடு நமக்கு ஏண்டா தகராறு? என்று கெஞ்சினான் முருகு. ''ஆமாண்டா, மழவராயன் ஆவி'' என்று தந்தி அடித்தான் அழகு.

"நீ சொன்ன கதை தான் பொய்யாயிற்றே! அப்புறம் மழவராயன் ஆவி எங்கிருந்து வரும்?" என்று குமரேசன் பெரிய வீரனைப் போல் முன்னே நடந்து பேழையைக் கையில் எடுத்துக் கொண்டான். அதே சமயம், முதல் நாளிரவு கேட்டது போன்றதொரு பெருமூச்சுச் சத்தம் மிகமிக லேசாகக் கேட்டது. சற்று முன் இல்லாத பயம் இப்போது அவன் மனத்தில் புகுந்து கொண்டது.

மண்டபத்தை விட்டு வெளியே வரும்வரையில் யாருக்குமே மூச்சு விடக்கூடத் தைரியம் வரவில்லை.

"இது மழவராயன் வேலை" என்று முனகினான் முருகு. "ஆமாம்" என்றான் அழகு. "இல்லை என்றால் அந்தப் பேழை ஏன் இந்த இடத்துக்குப் போக வேண்டும்?" இந்தக் கேள்வி மூவர் மனத்திலும் ஒரே சமயத்தில் எழுந்தது. அதன் எதிரொலிபோல ஒரு மெல்லிய குரல், "ஆமாம். மழவராயன் கடமை முடிந்தது! அதுவரை அவனுக்கு ஓய்வேது? ஆனால் இனிமேல் பண்டாரத்துக்கு இவை என்னத்துக்கு?" என்று கேட்டது. கேட்ட குரலில் உயிர் ஒலியே இல்லை. ஏதோ படுபாதாளத்தில் உருண்டுகொண்டிருக்கும் ஒருவனின் தீனமான குரலையே அது நினைவூட்டியது. மூவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர். அவர்கள் சற்று முன் கடந்து வந்த ஒரு மரத்தை ஒட்டினாற்போல மண்டபத்தின் வாசலில் ஒரு பண்டாரம் தலை முதல் கால்வரை காவித்துணியால் மூடிக்கொண்டபடி உட்கார்ந்திருந்தார். அவர் இருந்த நிலை, காவலிருப்பதைப்போலத் தோன்றச் செய்தது. ஒரே ஒரு கணம்தான் அவர்கள், அந்த முகத்தைப் பார்த்தார்கள். அப்பப்பா! அந்த ஒரு கணம்தான் எத்தனை பயங்கரமாக இருந்தது! மறைந்துவிட்ட சூரியனின் கடைசிக் கிரணங்கள் வீசிய மங்கலான வெளிச்சத்தில் காவி உடைகளுக்கிடையே வெள்ளைவெளேரென்று வெளுத்துக் காணப்பட்டது அந்த முகம். கண்களை இறுக மூடிக்கொண்டனர் மூவரும். மறுபடி அவர்கள் கண்ணை விழித்தபோது அந்த உருவம் அங்கே இல்லை. அடுத்த கணமே அவர்கள் பிடித்த ஓட்டம் விடுதி வந்து சேருமட்டும் நிற்கவில்லை. வேறு எந்த எண்ணமும் அவர்கள் மனத்தில் தோன்றவில்லை.

பேழையும் கையுமாக மேல் மூச்சு வாங்கத் தம் அறைக்குள் நுழைந்த மூவரையும் நிதானமாக வரவேற்றார் வார்டன். குமரேசன் தான் முதலில் பேச ஆரம்பித்தான். "ஸார்! ஸார்; இது நிச்சயமாக மனிதர்களின் வேலை இல்லை. நான் நேற்றிரவே சந்தேகப்பட்டேன். அங்கேயே ஓர் உருவம் தெரிந்தது. அதே உருவம் உங்கள் அறை ஜன்னல் பக்கமாகப் போவதையும் பார்த்தேன். அப்போதே பேழை போயிருக்குமோ என்று சந்தேகப்பட்டேன். அது நிச்சயமானதும், பேழை பண்டார மண்டபத்திலிருக்கும் என்று முடிவு செய்துவிட்டேன். அதே போல அது அங்கிருந்து கிடைத்தது. நீங்கள் சொன்னீர்களே, 'எந்த மனிதனும் ஜன்னல் வழியாக வந்துவிட முடியாது' என்று. அது உண்மைதான். ஆனால் பேய் அதன் வழியாக வர முடியுமல்லவா? தவிர, மனிதன் இதை எடுத்திருந்தால் ஏன் அந்தப் பண்டாரத்தார் மண்டபத்தில் வைக்க வேண்டும்? இதையெல்லாம் பார்க்கும்போது இந்த முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது" என்று முடிவாகச் சொன்னான் குமரேசன்.

வார்டன் நிதானமாக, "குமரேசா! உன் முடிவு இப்போதைய நிலைமையில் பொருத்தமாகத்தான் தோன்றுகிறது ஆனால் உண்மை அதுவாக இருக்க முடியாது. இந்தச் சிக்கலில் நமக்குப் பிடிபடாத அம்சம் ஒன்று இருக்கிறது. காலம் அதை விளக்கும்" என்று முடித்தார் வார்டன்.

## பேழை நகர்ந்தது

அடுத்துவந்த ஒரு வாரத்தில் பகல் பொழுதில் விசேஷமாக

எதுவும் நடக்கவில்லை. இரவு வேளைகளில் மட்டும் சோலையைச் சுற்றியும், சோலைக்குள்ளேயும் கரிய உருவங்களின் நடமாட்டம் இருப்பதாகத் தோன்றியது. பையன்கள் நாளொருவராக மழவராயன் ஆவியைப் பார்த்ததாகச் சொன்னார்கள். இரண்டு கறுப்பு உருவங்கள் வருவதாகவும் ஓர் உருவம் சோலையில் கட்டடங்களுக்குச் சற்றுத் தள்ளி வெளியில் நிற்பதாகவும், மற்ற உருவம் மட்டும் இங்குமங்கும் சஞ்சரிப்பதாகவும் அறைகளுக்குள்ளேயும் வந்து போவதாயும் பேசிக்கொண்டார்கள்.

அந்த வாரம் கவனத்தைக் கவரும்படியாக வந்த புதிய நபர் ஒரு ஸேட்தான். அவர் என்னவோ பள்ளியின் முன்னேற்றத்தில் மிகுந்த கவனம் செலுத்தினார். ''உங்களுக்குச் சொந்தமான அந்த ஜமீன்தார் பங்களாவில் புதையல் இருபபதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்களே, அதைத் தேட நீங்கள் முயற்சி செய்யக்கூடாதா? அது கிடைத்தால் உங்கள் கஷ்டங்களெல்லாம் நீங்கிவிடுமே'' என்று கேட்டபோது அவர் எவ்வளவு தூரம் அக்கறைகொண்டிருக்கிறார் என்பது தெரிந்தது!

''அதிலே எனக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை. இந்த மாதிரி கட்டடங்களைக் கண்டால், ஜனங்கள் இப்படியெல்லாம் கதை கட்டிவிடுவது இயற்கையே'' என்று தலைவர் சொன்னதைக் கேட்ட ஸேட்டின் முகத்தில் திருப்தி நிழலாடியதை அங்கிருந்த குமரேசன் கவனிக்கத் தவறவில்லை. அதைக் குமரேசன் வார்டனிடம் சொன்னபோது அவர் முகத்திலும் திருப்தி நிலவிற்று. அதே ஸேட் வார்டனையும் வந்து அவர் அறையிலேயே சந்தித்தார். பல விஷயம் பற்றி வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார். ஆனால் பேச்சைவிட, வார்டன் அறையின் அமைப்பை அறிவதிலேயே அதிகக் கவனம் செலுத்தியதாகப் பட்டது குமரேசனுக்கு.

இந்த நிலைமையில்தான் அன்று வார்டன் குமரு, அழகு, முருகு மூவரையும் இரவு தம் அறையில் தங்குமாறு சொன்னார். வார்டனின் அறை அதிக மாறுதல் எதுவும் இல்லாமல் அப்படியேதான் இருந்தது. ஜன்னலை மட்டும் கவனமாக மூடி இருந்தார். காற்று வருவதற்காக மேல் வென்டிலேடர் மட்டும் திறந்திருந்தது. அதன் பக்கமாக எதிர்ச் சுவரில் சிறியதாக ஒரு மின்மினிப்பூச்சி உட்கார்ந்திருப்பது போன்ற வெளிச்சம் மட்டும் தெரிந்தது. ஜன்னலுக்கு நேர் எதிரில் அலமாரி வைக்கப்பட்டிருந்தது. வார்டன் மூவரையும் இன்முகத்துடனேயே வரவேற்றார்.



''வாருங்கள் இன்று மிகவும் முக்கியமான காரியமாகத்தான் உங்களை வரவழைத்தேன். நான் ஓர் அவசர காரியமாக வெளியே போகவேண்டியிருக்கிறது. இந்த அறையின் முக்கியத்துவம் உங்களுக்குத் தெரியும். இங்கே தகுந்த காவல் இருக்க வேண்டும். அதற்கேற்றவர்கள் நீங்கள்தான் நான் வரும் வரையில் இந்த அறையில் நடப்பதை எல்லாம் நன்றாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். நான் கூடிய சீக்கிரம் வந்து விடுகிறேன். அதுவரையில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏதாவது அசாதாரண நிகழ்ச்சி ஏற்பட்டால் அதோ அந்த மூலையில் இருக்கும் விசையை அமுக்குங்கள்.

உள்ளே வெளிச்சம் ஏற்படும், உதவிக்கு யாராவது வருவார்கள். யாருக்கும் நீங்கள் இருப்பது தெரியக் கூடாது. ஜாக்கிரதை'' என்று எச்சரித்துவிட்டு, கதவையும் மூடிக் கொண்டு போய்விட்டார் வார்டன். நண்பர்கள் மூவரும் மூலையில் ஒண்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

சுற்றிலும் அந்தகாரம் அதை அந்த மின்மினிப் பூச்சி விளக்கின் ஒளி இன்னும் அதிகப்படுத்திக் காட்டிற்று. மனத்திலே என்னென்னவோ குழப்பமான காரியம் நடக்கப் போகிறதென்ற உணர்ச்சி மட்டும் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் டக் டக்கென்று ஒலித்தபடி நேரம் நில்லாமல் போய்க்கொண்டே இருப்பதைக் காட்டிற்று.

கடிகாரம் டங் டங் டங் என்று 12 முறை அடித்து ஓய்ந்தது. அந்தச் சப்தம் அடங்கியதும் சரியாக வெளியே ஒரு சிறு ஓசை. திறந்திருந்த பலகணி வழியாக வந்து கொண்டிருந்த சொற்ப வெளிச்சமும் நின்று விட்டது. எங்கும் ஒரே இருள். கூரைக்கும் தரைக்குமாக ஒரே கரிய உருவம் வியாபித்திருந்தது. அந்தக் கருமையிடையே மற்றொரு கறுப்பு அலை ஜன்னல் புறமிருந்து வீசுவது போன்ற ஓர் உணர்வு. சற்று இருட்டில் கண்கள் பழகவும் கை ஒன்று பலகணி வழியாக உள்ளே மெள்ள மெள்ள நீட்டப்படுவது மங்கலாகத் தெரிந்தது. அலமாரியை அடுத்துள்ள சுவர்வரையில் சற்று நேரத்தில் நீண்டுவிட்டது. சதைப்பற்றே இல்லாத எலும்புகளால் மாத்திரமே ஆனதுபோல் இருந்தது அந்தக் கை. ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி மூச்சுக்கூட விடாமல் உட்கார்ந்திருந்தனர் மூன்று நண்பர்களும். ''க்ளக்'' ஒரு சிறு சப்தம்; அலமாரியின் பின்னுலிருந்து கேட்டது. மறுகணமே அந்த மெல்லிய நீண்ட கை சுருங்க ஆரம்பித்தது. ''என்ன பயங்கரம்! அதன் முனையிலே அந்தப் பேழை போன்ற பொருள் மெல்ல மெல்ல ஆகாயத்தில் மிதந்து ஜன்னலை நோக்கி நகர்ந்தது. குத்திட்ட கண்களோடு அதைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தனர் மூவரும். சட்டென்று விளக்கைப் போட முயன்றான் குமரு. அவன் கைகள் அசைய மறுத்தன. கூச்சல் போட்டு அலற நினைத்தான் முருகு. அவன் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. ஆயிற்று; ஜன்னலை அடுத்த கணம் பேழை அடைந்துவிடும். அப்புறம் வெளியே போய் விடும். என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தனர் மூவரும். இன்னும் ஒரு மயிரிழை நகர்ந்தது பேழை. அந்தக் கணத்தில் மினுமினுத்த சிறு ஒளி அதிலே மோதிச் சிதறிற்று. அதே கணத்தில் சுவரிலிருந்து 'கண கண' வென்று மணியோசை கேட்டது. பளீரென்று எங்கும் ஒளி மயமாக விளக்குகள் ஏற்றிக்கொண்டன. பள்ளிக்கூடத்தின் பெரிய மணியும் ஒலிக்கத் தொடங்கியது. அந்த வெளிச்சத்தில் ஜன்னல் மேல் புறத்தில் கன்னங்கரிய பொருளின் முனையில் அந்தப் பேழை பிடிப்பொன்றும் இல்லாமல் ஒட்டிக் கொண்டிருந்தது தெரிந்தது. வெளிச்சத்தை கண்ட வேகத்தில் துள்ளினான் குமரேசன். அச்சமயம் அவன் கைகள் எதிலோ உரசிற்று. மறு கணம் ''படார்'' என்ற சத்தத்துடன் ஜன்னல் கதவுகள் திறந்துகொண்டன. அதைத் தொடர்ந்து ஒரு கனமான பொருள் கீழே விழும் ஓசையும் பலர் ஓடிவரும் காலடிச் சப்தமும், எல்லாவற்றுக்கும் மேலாக போலீஸ் ஊது குழலும், ''இதோ இவன்தான் பிடியுங்கள்'' என்ற வார்டனின் குரலும் ஒலித்தன.

## காலம் வந்தது

வார்டன் குரல் கொடுத்ததோடு நிற்கவில்லை. தாமே முன் வந்து அந்தக் கறுப்பு உருவத்தைப் பிடிக்க உதவியும் செய்தார். உருவத்தைப் பிடித்து மேலே மூடியிருந்த கறுப்பு அங்கியை அகற்றினார்கள். உள்ளே நின்ற அந்த ஆளின் தோற்றத்தைக் கண்ட போது, அவனை எங்கேயோ பார்த்

திருப்பதுபோல் தோன்றியது குமரேசனுக்கு. ஆளைப்பிடித்து இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைத்ததும் முதல் வேலையாக மேலே தொங்கிக் கொண்டிருந்த பேழையையும் அது ஒட்டிக்கொண்டிருந்த நூதனமான கருவியையும் கைப்பற்றுவதிலே கவனம் செலுத்தினர் வார்டன்.

சில நிமிஷங்களில் சூழ்நிலையே அடியோடு மாறிவிட்டது. இருளும் பயமும் நிச்சப்தமும் குடி கொண்டிருந்த இடத்தில் ஒளியும் பரபரப்பும் அதிசயமும் குடியேறின. ஆனல் குமரேசனையும் அவன் நண்பர்களையும் பொறுத்தவரை குழப்பம் முன்போலவேதான் இருந்தது. ''யார் இந்த ஆள்? இவன் ஏன் பேழையைத் தேடி அலைய வேண்டும்? பேழை எப்படித் தானுக நகர்ந்து வந்தது? சரியான சமயத்தில் மணியடித்ததும் விளக்குகளை ஏற்றியதும் யார்? இப்படி எத்தனையோ கேள்விகள் அலை அலையாக அவர்கள் மனத்தில் எழுந்து மோதிக்கொண்டன. அதற்குப் பதில் கூறுவதற்கே போல வந்தார் வார்டன்:

''ஸார்! உங்களுக்கு எல்லாம் ஒரே மர்மமாகவே இருக்கிறது. தயவு செய்து எல்லாவற்றையும் முதலில் விளக்கிவிடுங்கள். பிறகு தான் எங்கள் மனத்தில் வேறு எதுவும் ஏறும்'' என்ருன் குமரேசன்.

வார்டன் ஆரம்பித்தார்: ''நான் இங்கு வந்தது முதலே அந்தப் பங்களாவும் மடமும் என்னைக் கவர்ந்தன. அதைப் பற்றிப் பலர் பல கதைகள் சொன்னுர்கள். அம்சமாக இருந்தது அந்த இடங்களில் உலவும் பேய்தான். அதைப் பற்றிப் பல சந்தர்ப்பங்களிலும் விசாரித்துத் தெரிந்துகொண்டேன்.

''சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் பாலூர் ஜமீன்தார் பல காரணங்களால் தமது ஜமீனை இழந்துவிட்டார். அதனுல் மேலும் வழியில்லாமல் கொள்ளை வேலையில் இறங்கினர். அந்தச் சமயம் அவருக்கும் மடத்துப் பண்டாரங்களுக்கும் தகராறு மூண்டது. அழகேசன் சொன்னது போல் ஜமீன்தார் பண்டாரங்களையும், வெள்ளைக்காரர்கள் ஜமீன்தாரையும் அழித்தனர். இந்தக் கடைசிச் சண்டைக்கு முன்பாகத் தம்மிடமிருந்த முக்கியமான பொருள்களை ஓர் இரும்புப் பேழையில் வைத்து பத்திரப் படுத்திவிட்டார். இதை மழவராயன் அறிவான். அவன் கொல்லப்பட்டுவிட்டதாகத்தான் எல்லோரும் நம்புகிருர்கள். ஆனல் மழவராயன் அங்கிருந்து தப்பி விட்டதென்னவோ உண்மை.

''தப்பின மழவராயன் உயிருக்குப் பயந்து நாட்டைவிட்டு மலேயாவுக்குப் போய்விட்டான். அங்கே சில காலம் வேலை செய்து பிழைத்தான். அவனேடு பல கூட்டாளிகள் சேர்ந்தார்கள். அவர்களில் விநாயகம், ஆறுமுகம் என்ற இருவரும் அவனுக்கு இரண்டு கைகள் போல உதவினர்கள். கடைசிக் காலத்தில் மழவராயன் உயிர்விடும் சமயம் இந்த ரகசியத்தை அவர்களிடம் சொல்லிவிட்டுப் போய் விட்டான். ஆனல் புதையல் ஜமீன்தார் மாளிகையில் இருக்கிறதா, அல்லது மடத்தில் இருக்கிறதா என்று அவர்களால் அறிய முடியவில்லை. முதலில் மடத்திலே வேட்டையை ஆரம்பித்தனர்.

''இருவரிலும் ஆறுமுகம் நன்கு தேறிய புள்ளி. விஞ்ஞான நுட்பங்கள் தெரிந்தவன். அவற்றின் உதவியால் சாமர்த்தியத் திருட்டுகள் செய்து பழக்கப்பட்டவன். எப்படியும் புதையலை மற்றவனுக்குத் தெரியாமல் தட்டிக்கொண்டு போகத் திட்டம் போட்டு வந்தான். எனவே மாளிகையில் தேடும் வேலையைத் தானும், மடத்தில் தேடும் வேலையை விநாயகமும் செய்ய வேண்டுமென்று முடிவு செய்தான். அதன்படி இருவரும் நடத்திய புதையல் தேடு படலத்தின் பலனையே தற்செயலாகக் கண்ட சிலர் மழவராயன் ஆவியையும் பண்டாரத்தின் ஆவியையும் கண்டதாக நம்பினர்கள். இப்படியாகப் பிசாசு என்ற போர்வையிலே இந்த நாடகம் கொஞ்ச காலமாக நடந்து வந்தது. அதாவது அழகேசன் சொன்ன கதையில் பெரும் பகுதி உண்மைதான். ஆனல் அவர்களது அதிர்ஷ்டம் அந்தப் பேழை நம்

கையில் முதலில் கிடைத்துவிட்டது. உண்மையில் நாம் அங்கு இருந்த அதே சமயத்தில் ஆறுமுகமும் அதே இடத்தில் இருந்திருக்கிறன். நம்மை அவன் எதிர்பார்க்காததாலும் அவன் நம்மைக் கவனிக்கு முன்பே நாம் பேழையை எடுத்துவிட்டதாலும் அவன் அதிர்ச்சியடைந்து விட்டான். அதனல் நம்மை அப்போதே நேரில் சந்தித்துத் தாக்க முயலாமல், தந்திரமாக நம்மை ஏமாற்ற முடிவு செய்திருக்க வேண்டும். எனவே நாம் திரும்பி வந்துகொண்டிருக்கும் போதே நம்மிடமிருந்து அதைக் கைப்பற்றத் திட்டம் ஆறுமுகத்தின் மனத்தில் உருவாகி விட்டது. அவன் நம்மைப் பின்தொடர்ந்து வந்திருக்கிறன். அன்றிரவு அதை யாரும் எடுக்க வரக்கூடுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. எனவே கவனக் குறைவாக அதை அலமாரியின்மேலே வைத்துவிட்டேன். இது ஆறுமுகத்திற்குச் சௌகரியமாக அமைந்துவிட்டது. 'ஜன்னல் திறந்திருந்ததா? அலமாரி பூட்டப்படாதிருந்ததா?' என்ற பிரச்னைகளைக் குமரேசன் கிளப்பினனே, அதுவும் சரியான கேள்விதான். ஆனல் குமரேசன் நினைத்ததுபோல அது நடக்கவில்லை. வேறு முறையில் நடந்திருக்கிறது. திறந்திருந்த ஜன்னல் வழியாக எந்த மனிதனும் உள்ளே வர முடியாது. ஆனல் அந்த வழியாக மனிதன் உள்ளே வராமல் பொருளை மட்டும் எடுக்க முடியுமல்லவா?

நீங்கள் சற்றுமுன் ஒரு குச்சி போன்ற கை நீண்டு வந்ததையும் பேழை அதிலே ஒட்டிக்கொண்டு நகர்ந்து வந்ததையும் கண்டீர்கள் இல்லையா? இது உண்மையில் கையல்ல. உறுதியான, ஆனல் மெல்லிய தகடுகளாலான தடிதான் அது. கறுப்பு நிறம் பூசியிருந்ததால் இருட்டில் அதைக் கவனிப்பதே கஷ்டம். தேவையானபோது நீட்டவும் வேண்டாதபோது சுருக்கி ஓர் அடி நீளமேயுள்ளதாகச் செய்யவும் வசதிகள் அதில் உண்டு. இந்தப் பேழை இரும்பாலானது என்பதை நீங்கள் கவனித்தீர்களல்லவா? அதேபோல அவனும் கவனித்திருக்கிறன். காந்தம் இரும்பை இழுக்கும் என்பதை எல்லோரும் அறிவோம். ஆனல் இத்தனை பெரிய கனமான பேழையைத் தூக்க அதுவும் வேறு எந்த விதப் பிடிப்புமின்றி இவ்வளவு தூரம் கொண்டு வருவதற்கு நிலைக் காந்தத்தைவிட தற்காலிக காந்தமே (Electro magnet) ஏற்றது. எனவே குழாயின் முன் ஓர் இரும்புத் துண்டை (Soft iron) இணைத்து அதைச் சுற்றி ஒரு கம்பிச் சுருளை அமைத்தால் சுருள் கம்பி வழியாக மின்சாரம் பாயும்போது இரும்புத் துண்டு பலமுள்ள வலுவான காந்தமாக மாறும். மின்சாரம் பாய்வது நின்றல் காந்த சக்தியும் போய்விடும். இத்தகைய மின்சாரத்தை, பாட்டரிகளை உடையில் கொண்டு போவது மூலமாக இத்தகைய ஒரு கருவியை உபயோகித்து மிகச் சுலபமாக பெறலாம். அன்று அவன் வெற்றி பெற்று விட்டான். ஆறுமுகத்திடம் இத்தகைய கருவி அந்தச் சமயம் எப்படிக் கிடைத்தது என்று நீங்கள் கேட்கலாம். அதற்காகவே அவன் தொழிலைப் பற்றியும், அவன் அறிவைப் பற்றியும் நான் முதலில் குறிப்பிட்டேன். இதைவிடக் கூட நுட்பமான கருவிகளை நாம் அவனிடம் எதிர்பார்க்கலாம்.''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் ஆள் மிகவும் கெட்டிக்காரனக இருக்க வேண்டுமென்று தோன்றுகிறதே, ஆனல் அந்தப் பாழடைந்த மண்டபத்தில் இந்தப் பேழையைப் பதுக்கியது புதிசாலித்தனமான காரியமா?'' என்று குறுக்கிட்டான் முருகேசன்.

வார்டன் சிரித்தார். ''எடுத்துப் போனது மழவராயன் ஆவிதான் என்று பிறர் எண்ணவேண்டும் என்பதற்காகச் செய்திருக்கலாம். அப்பொழுது அதைக் கண்டாலும் யாரும் எடுக்க மாட்டார்கள் இல்லையா? அந்த முடிவுக்குத்தானே நாமும் வந்தோம்.''

ஆறுமுகத்தின் அந்தச் செய்கைக்கு அது மட்டும் ஒரே காரணமில்லை. திருடர்களிடம் மட்டும் பூர்ண ஒற்றுமை இருந்தால்

அவர்களை யாரும் வெல்ல முடியாது. விநாயகத்தை மடத்துப் பகுதியில் தேடச் செய்தான் ஆறுமுகம் என்று சொன்னேனல்லவா? விநாயகம் தன் பகுதியில் பூரணமாகத் தேடி, புதையல் அங்கு இல்லை என்பதை உணர்ந்து விட்டான். ஆறுமுகம் அனுவசியமாக விநாயகத்துக்கும் ஒரு பங்கு கொடுக்க விரும்பவில்லை. தன்னோடு தொடர்புள்ள எந்த இடத்திலும் அதை வைக்கவும் அவன் விரும்பவில்லை. விநாயகம் சந்தேகப்பட முடியாத இடமான மடத்திலே அதை ஒளித்து வைத்தான். ஆனால் அவன் துரதிர்ஷ்டம் யாரோ ஓர் ஆட்டிடையன் மூலம் விஷயத்தைத் தெரிந்துகொண்ட குமரேசன் அங்கே போய் அதையும் கைப்பற்றிவிட்டான். அப்படிக் கைப்பற்றுவிட்டால் பண்டார வேஷத்திலிருந்த ஆறுமுகம் அன்றிரவே அதை எடுத்துக் கொண்டு கம்பி நீட்டி யிருப்பான். ஆனால் அதை நீங்கள் கெடுத்து விட்டீர்கள். அதனுல்தான் அந்த முகத்தில் பேய்களை உங்களுக்குத் தோன்றிற்று.நம் கைக்குள் அடங்காத ஒரு சக்திதான் உங்களைக் காப்பற்றி இருக்கிறது.''வார்டன் சிறிதுநேரம் மௌனமாக இருந்தார்.

சற்றுப் பொறுத்து வார்டன் தொடர்ந்தார். ''நீங்கள் அன்று அதைத் தேடப் புறப்பட்டதுமே இதைப்பற்றித் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினேன். அன்று மாலையே இதில் பெரும்பாலான செய்திகளை நான் கூறியிருக்க முடியும். ஆனுல் சில விஷயங்கள் விளங்கவில்லை. நீங்கள் பேழையை எடுத்தவுடனேயே அது தன்னிடம்தான் வந்திருக்கும் என்று அவள் ஊகித்து விட்டான். அதை நிச்சயம் செய்து கொள்வதற்காகத்தான் ஸேட்ஜீ இங்கே வந்தார். புதையலைப் பற்றித் தலைவரிடம் அவர் பேசியதையும், பிறகு என் அறைக்கு வந்ததையும் நீங்கள் அறிவீர்கள். என் அறையில் வெகுநேரம் இருந்ததையும் கூட நீங்கள் அறிவீர்கள். கடைசியாக அலமாரியை அடுத்த கதவை நான் மூடியதையும், அதே சமயம் அவர் முகம் மலர்ந்ததையும் நீங்கள் கவனித்திருக்க மாட்டீர்கள். அலமாரியின் பின்புறமிருந்த சிறு பிறையில் அந்தப் பேழையை நான் வைத்திருந்தேன். அதை அறிந்ததனுல்தான் அவர் முகம் மலர்ந்தது.

''அதோ ஜன்னல் பக்கத்திலே சிறு வெளிச்சம் தெரிகிறதல்லவா? அது சாதாரணமான வெளிச்சமில்லை. போட்டோ எலெக்டிரிக் ஸெல் என்பதைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். அந்த முறையை ஒட்டித்தான் இந்த விந்தை அமைந்துள்ளது. சாதாரணமான ஒரு சிறு கம்பு வரும்போது இந்த ஒளி பாதிக்கப்படாது. ஆனுல் இந்தப் பேழை, அந்த வழியாக எடுக்கப் பட்டால், அந்த இடத்தை அது கடக்கும்போது நிச்சயம் ஒளியைச் சிதறச் செய்யும். அப்போது எதிர்ப் பக்கமிருக்கும் பொறியில் மின் சார ஓட்டம் மாறுபடும். அதன் மூலம் இந்த மணியை அடிக்கும். புதியதாக இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள இடங்களில் நான் அமைத்துள்ள மின்சார விளக்குகளுக்கான விசையையும் தட்டி விடும். இது நடந்த உடனே பள்ளி மணியையும் அடிக்க ஏற்பாடுகள் செய்திருந்தேன். வரும் ஆள் வேறு எந்த வழியையும் உபயோகிக்க முடியாதபடி எல்லாவற்றையும் அடைத்துவிட்டேன். மணியோசை கேட்டதும் உதவிக்கு வர சில ஆட்களையும் போலீஸாரையும் கூட ஏற்பாடு செய்திருந்தேன். ஆனுல் இத்தனையும் அந்த ஒரு பொறி சரியாக வேலை செய்வதைப் பொறுத்திருந்தது. ஒருகால் அது தவறிவிட்டால் அத்தனையும் வீணுகிவிடுமே! அதற்காகவே உங்களை இங்கே காவல் வைத்தேன். 'அவசியம் நேர்ந்தால், அந்த ஸ்விச்சை போடுங்கள்' என்று அதற்காகவே சொன்னேன். பேழை மேலே இருக்கும் வரை அதைப் போட உங்களுக்குத் தைரியம் வராது என்பது எனக்குத் தெரியும். அது வெளியே போய்விட்டால் நிச்சயம் அதைப் போடுவீர்கள் என்று நம்பினேன்.

''அதற்கு மூன்று காரணங்கள் உண்டு. இந்தச் சம்பவங்களுக்கு மூலகாரணம் நீங்கள்தான். அதனால் இதை நீங்கள் முடிப்பதுதான் நியாயம். தவிர விஞ்ஞானத்தின் உதவியால் சாதாரணமாக இயற்கையானவை என்று நம்பமுடியாத செயல்களையும் செய்ய முடியும் என்று நிரூபித்துக் காட்ட. ஆனால் மூன்றுவது காரணம்தான் முக்கியமானது. இத்தனை ஏற்பாடுகளும் செய்த பிறகு அவன் வராமல் போய்விட்டால்? அறையில் நான் இல்லை என்று அவன் நம்பும்படி செய்ய நான் வெளியே போக வேண்டியது அவசியமாயிற்று. எனவே, என் வேலையை நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள். இப்பொழுது எல்லாம் தெளிவாகி விட்டதா?'' என்று கேட்டார் வார்டன். ''ஸார்! இன்னும் ஒன்றை விளக்க வேண்டும். உண்மையில் பேய்-பிசாசு என்பவையெல்லாம் உண்மையா அல்லது வீண் புரளி தானா?'' என்று கேட்டான் குமரேசன்.

''ஓகோ, அதுவா? என் மனத்தில் தோன்றுவதைச் சொல்கிறேன். மனிதரின் உள் மனம் இயங்கும் விதத்தை நாம் சாதாரணமாக உணர முடியவில்லை. எந்த நிகழ்ச்சியும் காரண காரிய நியதியை ஒட்டியே நடைபெறுகிறது. பல சந்தர்ப்பங்களில் நமக்கு அவை புலப்படுவதில்லை. அவ்வளவே!'' என்று முடித்தார்.

''உண்மையில் பேய் இருக்கிறதோ இல்லையோ, விஞ்ஞானப் பேயும் மனப் பேயும் சேர்ந்து மனிதனை வெகுவாக ஆட்டி வைத்து விடுகின்றன'' என்று முடித்தான் குமரேசன்.

---


**Statement about ownership and other particulars about newspaper**

**KANNAN**

FORM IV

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | .. | **Madras** |
| 2. Periodicity of Publication | .. | **Fortnightly** |
| 3. Printer's Name | .. | **N. Ramaratnam, Managing Director M. L. J. Press Private Ltd.** |
| Nationality | .. | **Indian** |
| Address | .. | **55/56, Mundakanni Amman Koil St., Mylapore, Madras** |
| 4. Publisher's Name | .. | **N. Ramaratnam** |
| Nationality | .. | **Indian** |
| Address | .. | **4, Warren Road, Mylapore, Madras** |
| 5. Editor's Name | .. | **N. Ramaratnam** |
| Nationality | .. | **Indian** |
| Address | .. | **4, Warren Road, Mylapore, Madras** |
| 6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent. of the total capital | .. | **N. Ramaratnam, Sole Proprietor** |

I, **N. Ramaratnam,** hereby declare that the particulars given above a true to the best of my knowledge and belief.

Dated 26—2—1958

**N. Ramaratnam**
Signature of Publisher

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

## கண்ணன் கிளைக் கழகம்

சிந்தகும்பளளி- (கிருஷ்ணகிரி சமீபம்)
- உபதலைவர்: சி. பூ ஆடலரசு
- பொருளாளர்: சி. சூ. மழலையரசன்
- செயலாளர்கள்: சி. ந. வடிவேலன், நவமணி

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'நட்பு' என்ற (மாத இதழ்) கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. கதைகள் அனுப்ப விலாசம்: சி. பூ. ஆடலரசன், முத்துக் கூத்தன் தெரு, சிந்தகும்பள்ளி, கிருஷ்ணகிரி தாலூகா, சேலம் ஜில்லா.

வன்னிவேலம்பட்டி
- உபதலைவர்: சதானந்தம்
- செயலாளர்: சு. வேம்புலு
- பொருளாளர்: கை. ஜயப்பிரகாஷ்

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. விலாசம்: சு. வேம்புலு, c/o தலைமை ஆசிரியர், போர்டு ஆதாரப்பள்ளி, வன்னிவேலம்பட்டி போஸ்டு, மதுரை ஜில்லா.

## பேனா நண்பர்கள்

1. பி. நாராயணன், c/o பி. பசுபதி பி. எஸ்ஸி., (ஹானர்ஸ்), 203/2, ரஸ்தாபேட், புனா-2

2. எம். தமிழ்மணி, 223, 6-ஆவது கிராஸ்ரோடு, பாலஸ் குட்டஹள்ளி, பங்களூர்-3.

3. டி. எம். செல்வராஜ், சிவராஜ் பேட், திருப்பத்தூர். (வ. ஆ.)

4. ஜே. சந்தானம், சின்னையா மேஸ்திரித் தோட்டம், திருப்பத்தூர் (வ. ஆ.)

வி. சி. தேவதாஸ், 15. ரெட்டித் தெரு, ஆம்பூர். (வ. ஆ.)

டி. எஸ். ஜுஹுர் அகமது பாஷா, 22, மளிகை, குலாம்தீன் ஆம்பூர், (வ. ஆ)

7. ஜி. என். மாறன், காளியம்மன் கோயில் தெரு, ஒரத்தநாடு, ...ஞ்சை ஜில்லா.

8. தமிழ் வீரன், நான்காம் படிவம். ஆ-பிரிவு, கழக உயர்நிலைப் ...ள்ளி, அறந்தாங்கி, தஞ்சை ஜில்லா.

9. கே. அனந்தாச்சாரி, 27, லக்ஷ்மிபுரம் அக்கிரகாரம், காரைக்குடி.

10. எஸ். திருவேங்கடம், 14. லக்ஷ்மிபுரம் அக்கிரகாரம், காரைக்குடி.

11. பி. எல். சேதுராமன், c/o எஸ் வி, எஸ் பி, பி. எல், பழனியப்ப செட்டியார், வேந்தன்பட்டி போஸ்டு, திருச்சி ஜில்லா.

12. பி. ஜமால் முகைதீன், 9-ஆவது தெரு, ஏர்வாடி, திருநெல்வேலி ஜில்லா.

13. பி. ஜயராமன், 12. முத்தைய நாடார் தெரு, விருதுநகர்.

14. ஐ. அமீர்அலி, c/o எம். எல். பி. இஸ்மெயில் சன்ஸ், தபால் பெட்டி எண்-73, கொல்லம் (கேரளம்).

(Regd. as a Newspaper in Ceylon.) Regd. No. M. 554.



# கண்ணன்

## வெளியீடுகள்

| | | | ரூ. நயா பைசா |
|---|---|---|---|
| 1. | தங்க மாம்பழம் | ராஜி | 2·00 |
| 2. | லீடர் மணி | ஆர்வி | 1·50 |
| 3. | சைனா சு-சூ | ஆர்வி | 1.50 |
| 4. | ஜிம்மி | பெ. தூரன் | 1·50 |
| 5. | சந்திரகிரிக் கோட்டை | ஜனா | 1·25 |
| 6. | அசட்டுப் பிச்சு | ஆர்வி | 1·00 |
| 7. | மஞ்சள் பங்களா | ஜி. ஜயராமன் | 1·00 |
| 8. | சின்ன ராஜா | வாசகன் | 0·75 |
| 9. | பவழவல்லி | கி. ரா. | 0·75 |
| 10. | கவிஞர் கதை | கி. வா. ஜ. | 0·62 |
| 11. | விளையும் பயிர் | கி. வா. ஜ. | 0·50 |
| 12. | சமர்த்து மைனா | தி. ஜ. ர. | 0·50 |
| 13. | அபாயச் சங்கு | நீலம் | 0·50 |
| 14. | ஜக்கு | ஆர்வி | 0·50 |
| 15. | ஜம்பு | ஆர்வி | 0.50 |
| 16. | ஏரிக்கரை மாளிகை | ஜனா | 0·50 |
| 17. | மின்னல் அரக்கன் | ஜனா | 0·50 |
| 18. | ராஜாவும் குருவியும் | சோமசன்மா | 0·50 |
| 19. | கழுகும் கிளியும் | சோமசன்மா | 0·50 |
| 20. | தவளையும் காளையும் | சோமசன்மா | 0·50 |
| 21. | விஞ்ஞானம் பேசுகிறார் | பெ. நா. அ. | 0·50 |
| 22. | பாரஸீக ரோஜா | ஆர்வி: ஸாமி | 0·32 |
| 23. | புலிக் குட்டி | ஆர்வி: ஸாமி | 0·40 |
| 24. | தூங்கும் அழகி | ஆர்வி: ஸாமி | 0·25 |
| 25. | குளிகைத் தீவு | ஆர்வி: சங்கர் | 0·25 |
| 26. | மாஸ்டர் பாலகுமார் | ஆர்வி: ஸாமி | 0·25 |
| 27. | நீச்சல் பழக்கம் | டிமான்ஸ்டிரேட்டர் | 0·20 |
| 28. | பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் | எஸ். ஜே. | 0·20 |
| 29. | கோழி விதைத்த நெல் | சூடாமணி | 0·20 |
| 30. | தங்கத்தின் பந்து | சூடாமணி | 0·20 |
| 31. | என் பேர் என்ன? | சூடாமணி | 0·20 |

சந்தாதார்களுக்குக் கமிஷன் உண்டு

ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையில் உள்ளவர்களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் உள்ளன.

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை -4.**